தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

துணர் : 59 மலர் : 5

உள்ளுறை

1. அன்மொழித் தொகை 193

டாக்டர் ஏ. ஆதித்தன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

2. சுற்றுலா—அன்றும் இன்றும் ... 197

இரா. செயலக்குமி, எம். ஏ.,

3. புதிய கோணத்தில் தமிழியல் ஆராய்ச்சிகள் 206

முனைவர் சாலை இளந்திரையன்

4. உரை மரபு 211

மு. சண்முகம் பிள்ளை
தமிழ்ப் பல்கலைக் கழகம்

5. தொல்காப்பிய உவமவியல் காண்டிகையுரை 234

பேராசிரியர். ச. பால சுந்தரம்,
(சென்ற இதழ் தொடர்ச்சி)

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 குரோதன — ஆவணி மலர்: 5

ஆகஸ்டு — செப்டம்பர் 1985

அன்மொழித் தொகை

டாக்டர் ஏ. ஆதித்தன்

அனைத்து இலக்கண நூற்களும் அன்மொழித்தொகையினை அறுவகைத் தொகையினுள் ஒன்றாகச் சுட்டுகின்றன. தொகை நிலையில் அன்மொழித் தொகை பெறுமிடத்தினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியம் பண்புதொக வருஉம் கிளவி, உம்மைத் தொக்க பெயர், வேற்றுமை தொக்க பெயர் ஆகியவற்றின் ஈற்று நின்று இயலுவது அன்மொழித்தொகை எனக் குறிப்பிடுகின்றது. பிற இலக்கண நூற்கள் பண்புத்தொகை, உம்மைத்தொகை, வேற்றுமைத் தொகை உவமத்தொகை, வினைத்தொகை ஆகிய ஐந்தன் ஈற்று நின்று இயல்வது அன்மொழித்தொகை எனக் கூறுகின்றன.

அன்மொழித் தொகையினை விளக்குமுன் தொகையின் இலக்கணத்தினைக் காணலாம். அனைத்து இலக்கண நூற்களும் இரு சொற்கள் ஒரு குறிப்பிட்ட இலக்கண உறவில் அமைந்து ஒரு சொன்னீர்மை பெற்று விளங்குவதனையே தொகையெனச் சுட்டுகின்றன. இவ்விரு சொற்களிடையே உருபோ அன்றிச் சொல்லோ மறைந்து நிற்றல் உண்டு. இதனையே தொகையின் இலக்கணமாகக் கொண்டு அன்மொழித்தொகையினை ஆய்ந்து காணலாம்.

துடியிடை வந்தாள்.

துடி போன்ற இடையினை உடையவள் வந்தாள்.

ஈண்டுத் 'துடியிடை' என்பது உவமத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை எனக் கருதப்பெறும். துடியைப் போன்ற இடை என்னும் நிலையில் இது உவமத்தொகை யாகவும், பின்னர் இது துடியிடையினை உடையவளைச் சுட்டும் நிலையில் அன்மொழித் தொகையாகவும் கருதப் படுகின்றது.

துடியிடையினை உடையவள் என்னும் பொருண்மையில் செயல்படும்போது இது உவமத்தொகையாகத்தான் செயல் படுகின்றதேயன்றிப் பிறிதோர் தொகையாகச் செயல்பட வில்லை. 'துடியிடை(யினை உடையவள்) வந்தாள். என்னும் வாக்கியத்தில் 'துடியிடை' என்னும் உவமத்தொகை பொருள் நிலையில் மாற்றம் பெற்று ஒரு பெண்ணைக் குறிக்கின்றது.

இருசொற்கள் பிளவுபட்டிசைத்தலின்றி ஒரு சொன்னீர்மை பெற்று விளங்குதலே தொகையெனில் ஈண்டு அன்மொழித் தொகையில் புறவடிவில் ஒரு உறுப்பு மட்டுமே அமைந்து காணப்படுதலின் இதனைத் தொகையென்று கூற முடியாதன்றோ ? அன்மொழித்தொகையில் தொக்குவரும் பகுதி புறத்தே அமைந்து காணப்படுகின்றது.[1]

ஈண்டு உவமத்தொகை அன்மொழியாகச் செயல் படுகின்றதேயன்றி, பிறிதோர்வகைத் தொகையாகச் செயல்பட வில்லை. உவமத்தொகை பொருண்மை நிலையில் மாற்றம் பெற்று அன்மொழியாகச் செயல்படுகின்றது. 'துடியிடை' என்பது 'துடியிடையாளைக்' குறிப்பதால் இது அன்மொழி என்று அழைக்கப்பெறுகின்றது. 'துடியிடையாள்' என்னும் பொருள் இங்குத் தோன்றுதல் அல்லாத பொருளாயின் இது அன்மொழி எனப்பெயர் பெற்றது.[2]

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, உவமத்தொகை, பண்புத்தொகை, உம்மைத்தொகை ஆகியவைகள் பொருண்மை நிலையில் மாற்றம் பெற்று அன்மொழியாகச் செயல்படுமே அன்றி இவை அன்மொழித்தொகையெனப் பிறிதோர் வகைத் தொகையாகச் செயல்படுதலில்லை.

ஐந்து தொகைச்சொற்களும் பொருண்மைநிலையில் மாற்றம் பெற்று அன்மொழியாகச் செயல்படுவதனை இனி விரிவாகக் காணலாம்.

துடியிடை வந்தாள்
பொரிகடலை வந்தான்
கரும்பன்றி சாப்பிட்டான்

இம்மூன்று வாக்கியங்களிலும் உவமத்தொகை, வினைத் தொகை பண்புத்தொகை ஆகியன அன்மொழியாகச் செயல் படுகின்றன. துடியிடை, பொரிகடலை, கரும்பன்றி ஆகியன இதே பண்புடையார்களைக் குறிக்கும் வகையில் செயல் படுகின்றன.

இரண்டு சொற்களின் பொருள்களுக்கிடையே காணப் பெறும் ஒற்றுமை (Similarity between senses) ஒரு சொல்லுக்குப் புதியதொரு பொருள் கிடைக்கப் பெறுவதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. எனவேதான் 'கரும்பன்றி' என்னும் பண்புத்தொகை கரும்பன்றிக்குரிய பண்புகளுடைய ஒரு மனிதனைக் குறிக்கும் வகையில் அன்மொழியாகச் செயல்படுகின்றது.



ஈண்டு இரு சொற்களின் பொருள் ஒற்றுமை காரணமாக ஒரு சொல்லுக்குத் தன் இயற்கையான பொருளுடன் புதிய பொருள் ஒன்று கிடைக்கப்பெறுகின்றது. இங்குப் பொருள் ஒற்றுமை காரணமாகச் சொல்லுக்குப் புதிய பொருள் சேர்க்கப் பெற்றும் (name transfer due to similarity between senses) பொருண்மை நிலை மாற்றம் ஏற்படுகின்றது.

இவ்வாறு ஐந்து வகைத் தொகைசொற்களும் வெவ்வேறு நிலைகளில் பொருண்மைநிலை மாற்றத்தால் அன்மொழியாகச் செயல்படுதல் இயலும். சொல், பொருள் ஆகிவற்றின் தொடர்வு (Contiguity) அல்லது ஒற்றுமை (Similarity) காரணமாகச் சொல் (name) அன்றிப் பொருளில் (Sense) ஏற்படும் மாறுதல்களுள் ஒன்றே தொகைச் சொற்கள் அன்மொழியாகச் செயல்படுவதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

அடிக்குறிப்பு

1. வடிவ நிலையில் அன்மொழியினை பண்பின்தொகையோடு ஒப்பிட்டுப் பண்பின் தொகையில் புறவடிவில் உவமிக்கப் படும் இரு உறுப்புக்களும் அமைய அன்மொழியில் புறவடிவில் உவமிக்கப்படும் ஒரு உறுப்பு மட்டுமே அமைந்து காணப்படுகின்றது என்பார் விஜயவேணுகோபால்.

— கோ. விஜயவேணுகோபால், 1980: பக். 170 - 178. சேனாவரையர், கலலாடனார் கருத்துக்களின் அடிப்படையில் வடிவநிறையில் அன்மொழியினைக் கட்டு ஆகுபெயராகக் கருதுவாரும் உண்டு.

—ஏ. ஆதித்தன், 1981: பக். 23 – 29.

உடனுதவியவை

1 ஆதித்தன், ஏ., 1981 'தொகைகள் - மறுபரிசீலனை' சக்திவேலு மணிவிழா மலர், பக். 23-29. மதுரை.

2. கோதண்டராமன், பொன்., 1968 'ஆகுபெயர்-அன்மொழித் தொகை', தமிழணங்கு, பக். 1-4.

3. Ullmann, S., 1959 Semantics, Oxford.

4. Vijayavenugopal, G., 1983 Nominal Composition in Tamil, Madurai.

சுற்றுலா — அன்றும் இன்றும்

இரா. செயலக்குமி, எம். ஏ.,

சுற்றியும் சுழன்றும் இயங்கும் புவியினில் மனிதனுக்கு மனநிறைவு தருவதாய் இன்பம் பயப்பதாய்-இயற்கை அன்னையின் பேரெழிலில் தன்னை மறந்து பேரானந்த உணர்வு எய்த உதவி புரியும் சாதனமாய்ச் சுற்றுலா விளங்குகின்றது. ஆதி மனிதனிடம் பிறந்து, சங்ககால மனிதனின் மடியினில் தவழ்ந்து வளர்ந்த சுற்றுலா என்னுமிக் குழந்தை இன்றைய நவநாகரிக மனிதனுடன் கைகோத்து விளையாடுகின்றது. உலக அரங்கினில் இக்குழந்தையின் வளர்ச்சியை நோக்கும் போது, நம் பாரதத்தில் இது ஏழை வீட்டுக் குழந்தை போல் நலிந்து-மெலிந்து காணப்படுகின்றது. இக் குழந்தையின் வளர்ச்சியில் அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தினால் நாட்டின் பொருளாதாரம் முன்னேறுவதுடன் உலக அரங்கினில் பாரதத்தின் பெருமையும் உயரும் என்பது திண்ணம்.

இன்று உல்லாசப் பயணம், பிரயாணம், சுற்றுலா என்னும் பல்வேறு பெயர்கள் வழக்கில் இருந்தாலும் சங்க காலத்தில் செலவு, யாத்திரை என்னும் சொல்வழக்கு, சுற்றுலா என்னும் பொருளில் வந்துள்ளது எனலாம். காய், கனிகளை உண்டு குகைகளில் வாழ்ந்த மனிதனுக்குத் தான் இருந்த இடத்தை விட்டு உணவு தேடிப் பிற இடங்களுக்குச் சென்று பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எப்பொழுது தோன்றியதோ, அப்பொழுதே சுற்றுலாப் பற்றிய எண்ணம் தோன்றி விட்டது எனலாம்.

சுற்றுலா : சொல், பொருள், விளக்கம்

சங்க காலத்தில் சுற்றுலாவினைக் குறிக்கச் செல்லுவது என்ற பொருளில் 'செலவு' என்ற சொல்லையே குறித்தனர். இறை வழிபாட்டுக்குச் செல்லுவதனை 'யாத்திரை' என்னும் சொல்லால் குறித்தனர். "செலவு" என்னும் சொல் சங்க இலக்கியங்கள் பலவற்றில் விரவிவரக் காணலாம். "யாத்திரை" என்னும் சொல் பரிபாடலில் பயின்று வரக்காணலாம்.

திருப்பரங்குன்றத்தில் உள்ள திருமுருகப் பெருமானை வழிபட மக்கள் மதுரையிலிருந்து செல்கின்றனர். மக்கள் வழிபடச் செல்லும் அவ்வழி பற்றிக் குறிப்பிடும்பொழுது, ஆசிரியர்.

"யாத்திரை செல் யாறு"[1]

எனக் குறிப்பிடுன்றார்.

திருமுருகாற்றுப்படையில்,

"சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும்[2]
செலவுநீ நயந்தனை ஆயின்"

எனத் திருமுருகனின் ஆறுபடை வீட்டுக்கும் சென்று திரும்பிய செம்மலோன் ஒருவன், மற்றொருவனிடம் அதன் பயன்கூறி அந்தந்த இடங்களுக்குச் செல்லுமாறு ஆற்றுப்படுத்துவதாக உள்ளது. இங்கு யாத்திரை "செலவு" என்னும் சொல்வழக்கில் உள்ளது.

அத்துடன் எக்காரணம் பற்றிச் சென்றாலும் செலவு என்ற சொல்லே பயின்று வந்துள்ளது.

"செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே
வன்புறை குறித்த தவிர்ச்சியாகும்"[3]

என்கின்றார், தொல்காப்பியர். அஃதாவது தலைவன் செல்லக் கருதியதைத் தவிர்த்தல், செல்லாமை அன்று. தலைவியை வற்புறுத்தலைக் குறித்துத் தவிர்த்த தவிர்ச்சி யாகும். இதில் வரும் செலவு என்பது செல்லுவது என்னும் பொருள்பட, செலவிடை அழுங்கல் என்பது செல்வதைத் தவிர்த்தல் என்னும் பொருளில் வந்துள்ளது.

ஐங்குறுநூற்றில் "செலவழுங்குவித்த பத்து" செலவுப் பத்து" எனப் பாலைத் திணையில் பத்துப்பத்துப் பாடல்கள் உள்ளன.

பாலைக்கலியிலும் தலைவனிடம் தோழி, நீ பொருளிடத்துக் கொண்ட ஆசை காரணமாகத் தலைவியைப் பிரிந்து செல்லும் செலவைத் தவிர்ப்பாய்.

"ஒழிங்கினிப் பெரும நின் பொருட்பிணிச் செலவே"[4]

எனச் செலவழுங்க வேண்டுகின்றாள்.

---

1. பரிபாடல் 19 : 18
2. திருமுருகாற்றுந்படை : 62 - 64.
3. தொல்காப்பியம் : பொருள் : 183
4. கலித்தொகை : 4 : 25

இன்றும் "செலவு" இலக்கியப் படைப்பாளர்கள் சிலரால் பிற இடங்களுக்குச் செல்லுதல் என்னும் பொருளில் பயன் படுத்தப்படுகிறது. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் இலங்கைக்குச் சென்ற சுற்றுலாவினைப் பற்றி எழுதிய கட்டுரைத்தலைப்பினை "இலங்கைச் செலவு" என்றே குறிக்கின்றார்.[5]

கட்டுரையின் நடை பற்றி விளக்க வந்த தா. ஏ. ஞானமூர்த்தி அவர்கள் "நடை என்ற சொல்லுக்குச் செலவு என்பது பொருள். ஒருவன் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லக் கால் உதவியாய் இருப்பதுபோல ஒருவன் கருத்து மற்றொருவன் மனத்தை அடைதற்குச் சொல் கருவியாக உள்ளது" என்கின்றார்.[6] இவர் நடை என்பதற்குச் செலவு என்று பொருள் கூற இங்குச் செலவு என்பது செல்லுதல் என்னும் கருத்தையே விளக்குகின்றது.

நாகரிகம் வளர வளர மனிதன் பொருள் அடிப்படையில் உள்ள சிறு வேறுபாட்டால் பலவிதச் சொற்களைக் கண்டு கையாண்டுள்ளான். இவ்வாறே "செலவு" சில பொருள் வேறுபாட்டுடன் "சுற்றுலா" என்றாயிற்று எனலாம். செலவு என்னும் சொல் வழக்குச் சுற்றுலா என்று பயின்று வந்தது. கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தான் எனக்கூறலாம்.[7]

இன்று சுற்றுலாவிற்குப் பல்வேறு வரையறைகள் விளக்கங்கள் உள்ளன. இன்றைய நிலையில் சுற்றுலா வளர்ச்சி அடைந்துள்ளதால் பல்வேறு இடங்களுக்கும் சென்று சுற்றி வருபவர்கள் எல்லாம் சுற்றுலாப் பயணியர் அல்லர். ஒரு நாட்டின் எல்லைப் பகுதியில் குடியேறி அடுத்துள்ள நாட்டுக்கு வேலை செய்யும் பொருட்டுச் செல்பவரும் சுற்றுலாப்பயணியர் ஆகார். சுற்றுலா மேற்கொள்ளும் பொழுது செலவழிக்கும் பணம் தன் சொந்த இடத்தில் ஈட்டியதாக இருக்க வேண்டும். பொருளீட்டும் நோக்கத்துடன் சுற்றுலாச் செல்லுதல் கூடாது. மேலும், தான் சென்ற இடங்களில் இருபத்துநான்கு மணி

---

5. சுந்தரவடிவேலு நெ. து பதினொன்றாம் வகுப்பு மாணவ மாணவியர்க்குரிய உரைநடைப்பகுதி : 1975,

6. ஞானமூர்த்தி தா. ஏ., இலக்கியத் திறனாய்வியல்: தமிழின்பம்.கோவை-18 1980, பக். எண். 438-439.

7. Chambers Encyclopedia, New Revised Edition Volume XIII, Internalnational Learning Systems, Corporation Limited, LONDON, 1973, P.No 712

நேரங்களுக்குக் குறையாமலும் பன்னிரண்டு மாதங்களுக்கு மிகாமலும் தங்கியிருந்து சுற்றிப் பார்க்க வேண்டும் என, எம்.எசு. ஆனந்த் குறிப்பிடுகின்றார்.[8]

சங்ககாலத்தை நோக்கும்பொழுது அது வரன்முறையற்ற சுற்றுலா என்று கொள்ளலாம்.

"வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது"[9]

என்கின்றார், தொல்காப்பியர். மூன்று ஆண்டுகள் வரையிலும் ஓதற்காரணமாகப் பிரிவுண்டு என்பதே இதன் கருத்து. கூடுதலாக மூன்று ஆண்டுகள் இருத்தலும் சிற்சில சமயங்களில் அதற்கு முன்னரே திரும்புவதும் உண்டு.

தலைவனும் தலைவியும் தம் பதியில் இருந்தகன்று வேறிடத்திற்குச் சென்று மகிழ்ச்சியால் பொழுதினைக் கழித்ததை,

"யாறும் குளனும் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப"[10]

என்கின்றார், தொல்காப்பியர். சேரன் செங்குட்டுவன் தன் துணைவியுடன் அருகிலிருந்த குன்றுக்குச் சென்று, இன்பமயமாய்ப் பொழுதினைக் கழித்து இன்பச்சுற்றுலா மேற்கொண்டுள்ளான்.

ஒளவைப் பிராட்டி போன்ற புலவர் பெருமக்கள் தூது சென்றுள்ளனர். சமுதாயப் பணிபுரியும் பொருட்டுத் தூது செல்வதும் சுற்றுலாவின்பாற்படும். இன்றும் தூதுவர்கள் தூது செல்வதுண்டு. அன்று அந்தணர்கள் சென்ற தூதைப் பற்றி மதுரை வேளாசான்,

"எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே"[11]

அதற்கே பகை மன்னன் ஏணியும் சீப்பும் மாற்றி யானைகளின் மணிகளையும் நீக்கி விட்டான் என்று கூறுகின்றார்.

---

8. ANAND M.M , Tourism and Hotel Industry in India Prentice Hall of India Private Limited, New Delhi - 110001, 1976 P.No 14.
9. தொல்காப்பியம் : பொருள் : 386
10. தொல்காப்பியம : பொருள் : 189
11. புறநானூறு : 305

சுற்றுலாவின் வளர்ச்சிக்கு உதவி புரியும் அங்கங்கள் :-

சுற்றுலா வளர்ச்சி அடைய உதவி புரிபவை முக்கியமாக விளம்பரம் - அந்தந்த நாட்டு மக்களின் பண்பாடு - அரசியல் நிலை-வாகனவசதிகள் போன்றவையாகும். மேலும் வழிகாட்டிகளும் சுற்றுலா வளர்ச்சிக்கு உதவி புரிகின்றனர்.

விளம்பரம் :

இன்றைய உலகத்தினை விளம்பரயுகம் எனலாம். பொன்னுக்கும், புகழுக்கும், மண்ணுக்கும், மனிதனுக்கும் மட்டுமன்றி ஆண்டவனுக்கே விளம்பரம் தேவையாக உள்ளது. தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பொருட்டு விளம்பரங்கள் அளித்தல், பொருட்காட்சிகள் நடத்துதல், திரையிடுதல், சுற்றுலாக் காட்சிகளை அச்சிட்டு வழங்கல் ஆகிய பணிகள் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு விளம்பரப்படுத்தும் பணி சங்ககாலத்திலேயே உள்ளது எனலாம். திருமுருகாற்றுப்படையில் ஆண்டவனைத் தரிசித்து விட்டு வந்த ஒருவன் மற்றொருவனுக்கு ஆண்டவனின் அறுபடை வீடுகளையும் அறிமுகப்படுத்துவதே ஒருவகை விளம்பரம் எனலாம். ஆற்றுப்படை அனைத்துமே இவ்வகையைச் சார்ந்தவை எனில் குற்றமில்லை.

மக்களின் பண்பாடு :

இன்றும்-அன்றும்-என்றும் பாரதத்தில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியில் முக்கிய அங்கம் வகிப்பது பாரத மக்களின் விருந்தோம்பும் பண்பாடு எனலாம். வந்தாரை நகைமுகம் காட்டி வரவேற்று உபசரித்து விருந்துண்ண அழைக்கும் பண்பாட்டினால் அன்று மனிதன் எவ்வித இடையூறுமின்றி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பயணம் செய்தான். ஐவகை நில மக்களும் அவ்வந் நிலங்களுக்கு ஏற்ற வண்ணம் உணவு பரிமாறி விருந்தளித்தனர்.

> ''அல்இல் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
> முல்லைசான்ற கற்பின் மெல்லியல் குறுமகள்''[12]

என, நடு இரவிலும் விருந்து வரின் உவந்து வரவேற்கும் தன்மையுடையவள் என்று பெண்டிரின் பெருமை பேசப்படுகின்றது.

---

12. நற்றிணை 142 : 9-10

அரசியல் நிலை :

அரசியல் நிலையும் சுற்றுலா வளர்ச்சிக்கு உதவிபுரியும் சாதனமாக உள்ளது. சங்க கால அரசியல் நிலை முடியாட்சி அமைந்த காலம். அக்காலப் புலவர்கள் கலையை வளர்க்கும் பொறுப்புள்ளவர்கள்.

> "யாதும் ஊரே யாவரும் கேளிர்" [13]
>
> "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" [14]

எனச் சொல்லி எந்நாட்டிற்கும் தடையின்றிச் செல்ல உரிமை பெற்றவர்கள். பாணர், பாடிணியர், கூத்தர், விறலியர், பொருநர் போன்றவர்களும் இத்தகைய உரிமை பெற்றிருந்தனர். வாணிகத்திற்கு மட்டும் வரி வாங்கப் பெற்று முத்திரை குத்தும் வழக்கம் இருந்தது. எனினும் அக்கால அரசியல் நிலை சுற்றுலாச் செல்ல உதவியாய் இருந்தது எனலாம்.

இன்று குடியாட்சி முறை என்றாலும் வெளிநாடுகளுக்குச் செல்ல அனுமதிச் சீட்டு போன்ற பல எடுக்க வேண்டியுள்ளது. உள்நாட்டுச் சுற்றுலாவுக்கு அவை அவசியம் இல்லையெனினும், இன்று சுற்றுலா அதிக வளர்ச்சி பெறவில்லை. அரசியலில் பிரிவினை சாதியில் பிரிவினை – சமயத்தில் பிரிவினை போன்றவை இன்றைய சுற்றுலாவின் வளர்ச்சிக்குத் தடைக் கல்லாக உள்ளன எனலாம்.

வாகனம் வளர்க்கும் சுற்றுலா

சங்ககால மனிதன் நீர் வழியாகவும், நில வழியாகவும் சுற்றுலாச் சென்றான். ஆயின் இற்றை நாளில் நீர், நிலம், ஆகாயம் என் மூவகைப்பட்ட வழியினிலும் சுற்றுலாச் செல்கின்றோம்.

சங்ககாலத்தில் வாகனவசதி திருப்திகரமாக இல்லை. நிலவழிப் பயணத்திற்குப் பெரும்பாலும் கால்நடையாகவே சென்றுள்ளனர். எனவே, நிலவழிப்பிரிவு காலிற்பிரிவு என்றழைக்கப்பட்டிருக்கலாம். மேலும் வண்டிகள், தேர்கள் போன்றவற்றை உபயோகித்தனர் என்பதைக் கீழ்க்கண்ட அகநானூறு, பரிபாடல் வரிகள் மூலம் அறியலாம்.

---

13. புறநானூறு 192 : 1
14. புறநானூறு 206 : 13

"நீர்வாழ் முதலை ஆவித்தன்ன
ஆரை வேய்ந்த அரைவாய்ச் சகடம்" [15]
"வடிமணி நெடுந்தேர் மாமுள் பாய்க்குநரும்" [16]

நீர் வழியாகப் பெரும்பாலும் வாணிகமே மேற்கொண்டுள்ளனர். கரையோரங்களில் செல்லுதற்குச் சிறுசிறு ஓடங்களை வைத்திருந்தனர். பிறநாட்டு வாணிகத்திற்கு நுண்ணிய தொழிலமைந்த பரந்த இடவசதியுடைய நாவாய்களையும் வைத்திருந்தனர். உள்நாட்டு வாணிகத்திற்குப் பயன்பட்ட ஓடம், பஃறி எனப்படும்.

"வெள்ளை யுப்பின் கொள்கை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி" [17]

எனப் பட்டினப்பாலை பகர்கின்றது.

இன்று சுற்றுலாச் செல்வதற்கென்றே தனிப்பட்ட பேருந்துகள் விடப்படுகின்றன. இருக்கை மிருதுவானதாய், காற்றோட்டமுள்ளதாய், பொழுது போக்குச் சாதனங்கள் போன்ற பலவகைப்பட்ட வசதிகளுடன் இன்று பேருந்து வண்டிகள் அரசினராலும் தனியாரலும் விடப்படுகின்றன. விழாக்காலங்களில் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்வதற்கென்றே கூடுதலான பேருந்துகளும் விடப்படுகின்றன. புகைவண்டிகளும் நல்ல வசதியுடன் அரசினரால் விடப்படுகின்றன.

வான்வழிச்செல்லும் போக்குவரத்துச் செல்வந்தர்களுக்கே உரிய தனிச்சொத்து எனலாம். ஏழைகளின் எளிய கைகளுக்கு எட்டாத உயரத்தில் பறந்த கொண்டிருக்கும் ஒரு பறவை அது. ஆனால் வெளி நாட்டவர் பலரையும் நம் நாட்டுக்கு அழைக்கும் வண்ணம் அமையும் வெளிநாட்டுச் சுற்றுலாவுக்கு மிக இன்றியமையாதது விமானமேயாகும்.

கடல்வழிச் செல்லும் கப்பல்களில் வாணிகத்தின் பொருட்டுச் சரக்கு ஏற்றிச் செல்லுவதற்கும், பயணியர்க்கென்றும் இருவகைகள் உள்ளன நடுத்தர வர்க்கத்தினர் வெளிநாட்டுச் சுற்றுலா மேற்கொள்ள ஏதுவாய் இருப்பது கடல்வழிச் செல்லும் கப்பல்களே எனலாம்.

---

17. பட்டினப்பாலை : 29-30
15. அகநானூறு 301 : 6 -7
16. பரிபாடல் 12 : 28

இன்றைய வாகனங்கள், அனைத்து வசதிகளும் அவற்றினுள்ளேயே அமைக்கப் பெற்று நடமாடும் மனைகளாய்ச்-சிறு நகரமாய் விளங்குகின்றன எனில் மிகையாகாது.

வழிகாட்டிகள்

சுற்றுலாச் செல்லுபவர் சென்ற இடங்களின் சிறப்பைப் பற்றி அறியாதிருக்கும் பொழுது அவர்களுக்கு அந்த இடங்களில் சிறப்பை விளக்கிச் சொல்லி, பல இடங்களுக்கும் வழி காட்டுபவர் வழிகாட்டிகள் எனப்படுவர். இவர் சொன்னலம் வாய்ந்தவராய், பொறுமை மிக்கவராய், அந்தந்த இடங்களின் சிறப்பு வரலாறு பற்றித் தெளிவாக அறிந்தவராய் இருத்தல் வேண்டும்.

சங்க காலத்திலேயே வழிகாட்டிகள் இருந்தமை பற்றி

> "ஒன்றிய படியிது என்றுரை செய்வோரும்
> இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்
> துன்னுநர் சுட்டவும் சுட்டு அறிவுறுத்தவும்" [18]

என்று பரிபாடல் கூறுகின்றது.

தவறான வழியில் சென்றவர்கள் பின்வருபவர்களும் அவ்வழியில் சென்று இன்னலுறாதிருக்க ஊகம்புல்லை முடிந்திட்டு வைப்பர்

> "பண்டுநற் கறியாப் புலம்பெயர் புதுவிர்
> சந்துநீவிப் புன்முடிந்திடு மின்" [19]

என்று மலைபடுகடாம் கூறுகின்றது.

முடிவுரை

சுற்றுலாவினை அரியதொரு கலை என்பர்.[20] பொருள் வருவாயை ஈட்டி நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் இக்கலை நமது நாட்டில் சரியான வளர்ச்சி அடையவில்லை எனலாம். கலைச் செல்வங்கள் பல நம்மிடையே குவிந்து கிடந்தாலும் பிறரைக் கவரும் வண்ணம் நாம் அவற்றை

18. பரிபாடல் 19 : 52 - 54
19. மலைபடுகடாம் 392 - 393
20. அ. இலக்குமணஞ் செட்டியார், சோம, "பிரயாணம் ஒரு கலை" மலர் நிலையம், சென்னை, 1957.

விளம்பரப்படுத்துவதில்லை. மேலும், நமது பழமை வாய்ந்த கலைச் செல்வங்கள் பலவும் அழிவின் வாயிலை நோக்கிய வண்ணம் வந்தவரின் கண்களுக்கு விருந்தளித்து அவர்களின் வெறுப்பைச் சம்பாதித்த வண்ணம் உள்ளன. நாட்டில் மலிந்து கிடக்கும் சுகாதாரமின்மை, பசி, பட்டினி, பஞ்சம் கொள்ளை போன்றவையே சுற்றுலாவின் வளர்ச்சிக்கு முக்கிய தடைக்கற்களாக உள்ளன. இவற்றைக் களைய அரசு ஆவண செய்தால் நலம் பயக்கும்.

பயமுறுத்தும் பட்டங்கள்

நமது ஊர் வயல்புறங்களில் பறவைகளை அச்சுறுத்தச் சோலைக்கொல்லைப் பொம்மைகளைக் குச்சியில் கட்டி நிறுத்தி வைக்கிறோமல்லவா, அதைப்போலப் பிரிட்டனில் பட்டங்களைப் பறக்கவிட்டு, முட்டைகோஸ், பட்டாணித் தோட்டங்களைப் பாழ்படுத்தும் புறாக்களைப் பயமுறுத்து கின்றனர். பட்டங்கள் வெறும் பொழுதுபோக்குச் சாதனம் என்பது மாறி, பயிர் காக்கும் தோழனாகிவிட்டது. 2 மீட்டர் அளவுள்ள சிவப்பு நிறப் பட்டங்களைப்பார்த்துப் புறாக்கள் அஞ்சுகின்றனவாம். இதனால், முட்டைக்கோஸ், பட்டாணி ஆகியவற்றுக்கு வரும் ஆபத்து தவிர்க்கப்படுவதாகவும், நல்ல விளைச்சல் இருப்பதாகவும் நியூ சயன்டிஸ்ட் என்ற பத்திரிக்கை கூறுகிறது. ஆனால், பட்டம் பறப்பதற்குத் தேவையான காற்று இல்லாத காலத்தில் புறாக்கள் தம் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வதாகவும் அந்த இதழ் தெரிவிக்கிறது.

"நன்றி: அறிவியல் பண்ணை, தமிழ் பல்கலைக்கழகம்"

பறக்கும் ஈயும் பரவும் நோயும்

உலகிலுள்ள பூச்சிகளிலேயே மிகமிகக் குறைந்த வாழ் நாளை உடைய பூச்சி எது தெரியுமா? நம் வீடுகளில் பறக்கும் ஈதான் அது. ஆண் ஈ 17 நாட்கள்தான் வாழ்கின்றது. பெண் ஈ 29 நாட்கள் வாழ்கின்றது. 30 நாட்களுக்கும் குறைவாகவே வாழ்ந்தாலும், இவை மனித சமூகத்தில் 30 வகை நோய்களைப் பரப்பிச் சாதனை புரிகின்றன. எனவே, ஈ பரவுதலையும் ஈ மொய்த்த பண்டங்களைப் பயன்படுத்தலையும் தவிர்த்தல் வேண்டும்.

"நன்றி: அறிவியல் பண்ணை, தமிழ் பல்கலைக்கழகம்"

புதிய கோணத்தில் தமிழியல் ஆராய்ச்சிகள்

— முனைவர் சாலை இளந்திரையன்

தமிழர்கள் சங்க இலக்கியம் என்னும் ஒரு சீரிய கலைப் படைப்புக்குச் சொந்தக்காரரர்கள். அந்த நாளில் தமிழர்களின் மண்ணைத் தமிழர்களே ஆண்டுவந்தார்கள் என்பதும் வரலாறு. தமிழ்க் குறுநில மன்னர்களும் முடிவேந்தரும் அந்நாளில் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக் கொண்டாலும், அந்தப் போர்களின் வெற்றி-தோல்விகள் மக்கள் வாழ்வின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பாதிக்கவில்லை. வேற்றுமொழி நாகரிகக் கலப்புகளுக்கு வாய்ப்பு இல்லாததால், வாழ்வின் எந்த ஒரு துறையும் இந்தப் போர்களால் பெரிதும் பாதிக்கப்படவில்லை.

அந்தக் காலம்

இந்த வரலாற்றுக் கட்டத்தில் எழுந்த இலக்கியம் அதற்குப் பிற்பட்ட இலக்கியங்களினின்று பெரிதும் வேறுபடுவது இயல்பு. சங்க காலத்தை அடுத்து ஏற்பட்ட களப்பிரர் படையெடுப்பைத் தொடர்ந்து, தமிழகத்தின் வாழ்விலேயே பெரிய கொந்தளிப்புகள் ஏற்பட்டுள்ளன. தமிழர்களின் தோல்வி — பின்னர் பாண்டியத் தமிழர்களின் வெற்றி, அடுத்துப் பல்லவர் ஆட்சி, அதைத் தொடர்ந்து சோழத்தமிழர் எழுச்சி என்று இவ்வாறு, பல நூறு ஆண்டுகளாகத் தமிழகமே ஒரு போர்க்களமாகிக் கிடந்திருக்கிறது.

அடிப்படையை அசைக்காத தமிழர் போராட்ட முன் வரலாற்றுக்கும் வாழ்க்கை நெறிகளிலேயே அயன்மைகளை ஏற்றிய பிற்காலத் தமிழர் போராட்ட வரலாற்றுக்கும் பாரிய வேறுபாடு உள்ளது. இதன் விளைவான தாக்கம் தமிழ்க் கலைப் படைப்புகளை வெகுவாகப் பாதித்து மாற்றியது என்பது தெளிவு.

சான்றாக, சங்ககாலத்தில் தமிழ் வாழ்வின் 14 கருப்பொருள் களுள் ஒன்றாக மட்டும் இருந்த கோயில் / கடவுள் நம்பிக்கைக் கோட்பாடு, வள்ளுவர் காலம் தொட்டுத் தமிழ்வாழ்வின் மய்யத்தையே பிடித்துக் கொண்டது. இதன் விளைவு, பிற் காலத்தில் பக்திப் பாடல்களாகவும் அந்த உணர்வை அடிப்படையாகக் கொண்ட நெடுங்கதைகளாகவும் முகிழ்த்தது.

வடக்கிலே இருந்து வந்து சேர்ந்த சமணம், பவுத்தம், சனாதனம் போன்ற மதங்களின் சிந்தனைகளுக்கு இந்த மாறுதலை ஏற்படுத்திய வரலாற்றில் பெரும்பங்கு உண்டு.

கடவுள் மத முதன்மை வாழ்க்கை அமைப்பு எனும் இந்த நெறியானது,-கடவுளுக்கு வாழ்விலே மிகச் சிறிய (1/14) இடமே கொடுத்திருந்த சங்ககால மற்றும் அதற்கு முற்பட்ட தமிழ் வாழ்வு நெறியோடு ஒத்ததாக இருக்க முடியாது. ஆகவே, தமிழ் இலக்கியத்தையும் கலைகளையும் மதிப்பிடப் புறப்படும் போது,-அந்தந்த வாழ்வு நெறிகளின் அடிப்படையில் எழுந்து உயர்ந்த சங்க இலக்கியம், இடைக்கால இலக்கியம் என்னும் இரண்டுக்கும் வேறு வேறு அளவுகோல்களை நாம் பயன்படுத்த வேண்டியது இன்றியமையாததாகிறது. நன்செய்ப்பயிர், புன்செய்ப்பயிர் என்னும் இரண்டும்- "பயிர்" என்ற பொதுநோக்கில் ஒன்றாகத் தெரிந்தாலும், அவை அடிப்படையில் வேறுவேறு பருவங்களுக்கும் பயிரேற்ற முறைகளுக்கும் உரியன அல்லவா? ஆகவே, சங்க இலக்கியத்தை ஓர் இலக்கியமாக மதிப்பிடுவதற்கு உரிய கோட்பாடுகளைக் கொண்டு நமது இடைக்கால இலக்கியங்களைச் சரியாக மதிப்பிட இயலாது என்பதை நாம் உணரவேண்டும்.

இக்காலம்

இனி, மேலை நாட்டினர் தொடர்பால் சிறுகச் சிறுக வேறுபட்டு வேற்றுநிறம் காட்டத் தொடங்கிய புதிய தமிழ் இலக்கிய வரலாற்றில், புரட்சிக் கவிஞரின் படைப்புகள், கோயில்மதக் கோட்பாட்டு மய்ய வாழ்க்கை என்பதைத் தலைகீழாக மாற்றி மனித முதன்மை வாழ்க்கை என்பதற்கு அடிகோலுகின்றன. இன்றுள்ள சிலருடைய படைப்புகளில் இன்னமும் இடைக்கால இலக்கியப்பண்புகள் அங்கங்கே ஒட்டிக்கொண்டு இருந்தாலும், - இந்த நூற்றாண்டில் எழுந்த தமிழ் மறுமலர்ச்சி இயக்கங்களின் விளைவாக, புரட்சிக்கவிஞர் போட்ட மனித மய்ய அடிப்படைக் கோட்பாடுகளில் எழுவனவே சீரான தமிழ் இலக்சியங்கள் என்னும் கருத்து இங்கே வலுவாக ஏற்பட்டுள்ளது.

பழந்தமிழ் வாழ்வு முற்றிலும் இன்று எடுத்து வலியுறுத்தப் படும் மனித மய்யக்கோட்பாட்டு அடிப்படையில் அமைந்ததல்ல வாயினும், இடைக்காலக் கோயில் மய்ய வாழ்வை விட, இன்றைய வாழ்வோடேயே அது (பழந்தமிழ் வாழ்வு) மிகு நெருக்கம் உடையதாகக் காணப்படுகிறது. படவே, — இன்று

வாழும் சீரான தமிழர்கள், — இடைக்கால இலக்கியத் தாக்கம் உடைய இன்றையப் படைப்புகளை விடப் புரட்சிக் கவிஞர் நாட்டிய அடிக்கல்லில் எழுந்து உயரும் மனிதமய்ய இலக்கிய மாளிகைகளையே சரியான தமிழ் இலக்கியங்களாகக் கொள்ளுகிறார்கள்.

மதிப்பீடுகள்

இந்த அடிப்படையில் 3000 ஆண்டுத் தமிழ்இலக்கியங்களை மதிப்பிடப் புறப்படும்போது, ''தமிழ் இலக்கியம்'' என்னும் பெயரில் நம்முன் உள்ள நீண்ட பெரிய பட்டியலை முதலில், வரலாற்று நோக்கிலே மூன்று பெரும் பிரிவுகளாக வகுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அதன்பிறகு, வெவ்வேற மய்யக் கோட்பாடுகளின் மீது எழுந்த மூன்று வெவ்வேறு இலக்கியங் களையும், ஆங்காங்குத் தோன்றும் சிலும்பல் நெரடல்களின் காரணமாக எழுந்த வேறுவேறு உட்கூறுகளையும் வேறு படுத்திக் கண்டு தனித்தனியே ஆராய வேண்டியுள்ளது.

சான்றாக, சங்க இலக்கியம் என்னும் மொத்தக் குவையில், கோயில் - மத முதன்மையைச் சொல்லும் குரல் எங்கேனும் கேட்டால், அதைப் பிற்காலத்துக்கு உரியதாகப் பிடுங்கி எடுத்து வேற்றிடத்தில் நடலாம்; அல்லது, அந்த நாளிலேயே அங்கங்குச் சிலும்பிய தனிக் குரலாக அதைச் செய்யலாம்.

''இன்பமும் பொருளும் அறனும் என்று ஆங்கு அன்பொடு புணர்ந்த அய்ந்திணையாகவே வாழ்வைக்கண்டு, அம்மூன்றையும் வாழ்வின் முடிபொருளாக வரையறுத்தது தொல்காப்பியம்; இதனில் கலந்த இடைக்கால (சங்க காலத்துக்குப் பிற்பட்ட) வாழ்க்கை நெறியையும் அளாவிய தாக, ''அறம் பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே'' என்று கூறி, — வாழ்வின் முடி பொருள்கள் நான்கு என்றது நன்னூல்.

முடிபொருள்கள் பற்றிய இந்த இருவேறு கோட்பாடுகளின் அடியாகப் பிறந்த இலக்கியங்கள், அனைத்து வகையிலும் (வடிவம், உத்தி, நடை, நயம், நளினம் என்னும் பலவற்றிலும்) வேறுபட்டு இருப்பது இயல்பே அல்லவா? அவைகளை மதிப்பீடு செய்வதற்கு நாம் மேற்கொள்ளத் தக்க திறனாய்வு அளவுகோல்களும் முற்றிலும் வேறுபட்டவைகளாக இருக்க வேண்டியதும் அவசியம் அல்லவா?

அதேபோல, கடவுள் உருவத்திலேயே சொக்கிப் போகும் பக்தர்கள் பாடிய பாடல்களோடு, "நட்டகல்லும் பேசுமோ, நாதன் உள்ளிருக்கையில்?" என்று கேட்ட சித்தர் பாடல்களை, கடவுள் மய்யத்திலேயே ஒரு தனிக்கிளை எடுத்துக் கரை இடித்த குரலாகக் கொண்டு அந்த அடிப்படையில் அதை மதிப்பிட வேண்டும்.

தெளிவுபெற

வாழ்விலிருந்தே கலை — இலக்கியம் பிறக்கிறது ; அந்த இலக்கியம் வாழ்வின் பல கூறுகளிலும் சிறுசிறு மாறுதல்களை உண்டாக்குகிறது. இதுதான் மனிதனின் வாழ்வுக்கும் அவனுடைய படைப்புகளுக்கும் இடையே உள்ள உறவு. ஆகவே, நமது (பழங்காலம், இடைக்காலம், இக்காலம் என்னும்) முக்கால வாழ்வின் நுட்பக் கூறுகளை அவ்வக்கால இலக்கியங்களைக் கொண்டு தெளிவுபடுத்திக் கொள்ளவும், அவ்வக்கால இலக்கியத் தொனிப் பொருள்களை அக்காலத்து வாழ்க்கை நோக்கு, நடைமுறை என்பவைகளைக் கொண்டு சிக்கலறத் தெளிந்து கொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. இருக்கவே, நாம் "தமிழியம்" என்று குறிப்பிடும் தமிழ் வாழ்வு, வரலாறு, கலை — இலக்கியம், சிந்தனை, ஆட்சி என்னும் பலவற்றினும் ஒரு முழுமைத் தெளிவைக் காண விரும்பினால், அவை ஒவ்வொன்றையும் பிறவற்றோடு தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்காமல், இலக்கியங்களை அவை தோன்றிய காலக் கட்டத்துக்கு வெளியே (out of context) எடுத்து வைத்து ஆராய்வதால் எந்தப் பயனும் விளையாது; அதேபோல் தமிழகம் அவ்வப்போது தந்துள்ள வாழ்வியல் சிந்தனைகளை அவற்றுக்குப் பின்புலமாக உள்ள (அந்நாள்) வரலாற்றுக்கு வெளியே எடுத்து வைத்து இலட்சிய முலாம் பூசினால், அவை மெய்மையாக விளைவிக்க வேண்டிய வாழ்க்கைப் பயனை விளைவிக்கவே மாட்டா.

எடுத்துக்காட்டாக, "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் குரல், ஒருவகையான தொடக்கநிலைப் பொது உடைமைச் சமுதாய அமைப்பில் இருந்து எழுகின்ற குரல்; மனிதர் உணவை (மற்ற) மனிதர் பறிக்காததும், சமுதாய பொதுக் கடமைகளை அனைவரும் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டு செய்வதும் ஆகிய அந்தச் சமுதாயத்தில் ஒருவரால் மற்றொருவருக்குத் தீமை ஏற்படுவதில்லை. ஆனால், மனிதனை மனிதன் அடக்கி ஆளக் கருதும் முதலாளியக்

காலனித்துவச் சமுதாய அமைப்பில் இப்படிப்பட்ட குரல் எழவே முடியாது. காரணம், இந்த அமைப்பில், சுரண்டிச் சுயநலத் தரத்துக்கு மனிதர் சிலர் இழிந்து விடுவதால்,- இந்தச் சமுதாயத்தில், நன்றும் தீதும், பெரும்பாலும் பிறராலேயே ஒருவருக்கு ஏற்படுகின்றன. ஆகவே, இந்த அமைப்பில், "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்னும் வரியைப் பெரிதுபடுத்தாமல், மற்றவனைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதே இலக்கிய குரலாக எழவேண்டும்.

புதிய ஆய்வு

இந்தப் பின்னணித் தெளிவோடு நமது கலைகளையும் பிறவற்றையும் ஆராய்ந்து எடுக்கப்படும் முடிவுகளே சரியான சமுதாய முடிவுகள். அப்படிச் செய்வதன் மூலம் தான், புதிய எதிர்கால ஆக்கத்துக்கு நமது பழமையைச் சரிவரப் பயன்படுத்த முடியும். ஆகவே, இதுவரை தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் தமிழ் வாழ்வின் பல கூறுகளிலும் ஆராய்ச்சிகள் நடந்திருந்தாலும், அவை அனைத்தையும் பற்றிய ஒரு புதிய ஆய்வுக்கு இடமும் தேவையும் இருக்கவே செய்கின்றன. தமிழின் நீண்ட வரலாற்றிலும் அதன் எதிர் காலத்திலும் ஆழ்ந்த அக்கறை உடையவர்கள், தமிழியல் ஆய்வின் இந்தப் புதிய தேவையைப் புறக்கணிக்க முடியாது.

உரை மரபு

மு. சண்முகம் பிள்ளை

உரையின் பிறப்பும் உயர்வும்

மனிதன் என்று பேசுதற்கு நாவை அசைத்தானோ அன்றே பிறந்தது தமிழ் என்று உரைத்தார் ஒரு பெரியவர். உள்ளம், உரை, செயல் மூன்றுமே பண்படவேண்டும். 'உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்' என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. உள்ள நினைவுகள் உரையாயும் பின் எழுத்தாயும் பிற செயற்பாடுகளாயும் விரிந்து செல்வன.

உரைக்கப்படுவது உரை, உரை, பேச்சு, சொல், கிளவி, வார்த்தை என்பன எல்லாம் ஒரு பொருளன. உள்ளக் கருத்தின் வெளிப்பாடாகிய உரையினால் தான் நம் எண்ணங்களை வெளிப்படுத்த இயலும். ஒருவர்க்கொருவர் பேசுதலை, 'உரையாடல் என்கிறோம். 'சொல்லாடுதல்' என்றும் முன்னையோர் குறிப்பர்.

பாட்டும் உரையும்

பாட்டு என்பதோடு சேர்த்து உரை என்னும் போது பாட்டின் பொருளை விளக்க வருவது உரைப்பகுதி எனக் கருதப் பெறும்.

> "பாட்டும் உரையும் பயிலாதன இரண்டு
> ஓட்டைச் செவியும் உள"

என்னும் ஔவைப் பிராட்டியின் வாக்கிலே பாட்டும் அதற்கு விளக்கமாக அமையும் உரையும் இணைத்துப் பேசப்படுதல் காணலாம்.

> 'உரையும் பாட்டும் உடையோர் சிலரே
> மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே'
>
> (புறம். 27 : 5 – 6)

என்கிறார் புறநானூற்றுப் புலவராகிய உறையூர் முதுகண்ணன் சாத்தனார்.

'உரையும் பாட்டும் உடையோர்' என்னும் இவ்வடியைப் "புகழ்தான் உரையும் பாட்டும் என இருவகைப்படும். அவற்றுள் உரைப்பார் உரைப்பவை என எல்லார்க்கும் உரிய வழக்கினையே எடுத்தாராயினும் இனம் பற்றிப் புலவர்கே

உரிய செய்யுளும் கொள்ளப்படும். படவே, பாடுவார் பாடுவனவெல்லாம் புகழாம் என்பதுஉம் பெற்றாம்'' எனப் பரிமேலழகர் (குறள் 232 உரை) விளக்கி உரைக்கின்றார். ஆகவே புகழ் உரைநடையிலும் பாட்டு வடிவிலும் அமைய லாகும் என்பது பெறப்படும்.

தொல்காப்பியரும், 'பாட்டு உரை நூலே' எனத் தொடங்கும் நூற்பாவில் (தொல். செய்யு. 79) பாட்டிற்கு அடுத்தபடியாக உரை என்பதனை வைத்துள்ளமை இரண்டற்குமுரிய நெருங்கிய பிணைப்பைக் காட்டும். ஆகவே, பாட்டும் உரையும் தமிழில் பழங்கால முதல் வழி வழியாக வளர்ந்து வளம் பெற்று வருவன என்பது தெரிய வரும்.

பாட்டோ அடிவரையறையுடன் மெய்ப்பாடு தோன்ற உவமை முதலிய அணிநலம் வாய்ப்பப் புலவனாற் பாடப் பெறுவது. உரை என்பதற்கு அதுபோன்ற அடிவரையறை இல்லை. உரைப்போர் உள்ளக்கருத்தின் அளவாய் அது வளர்ந்து செல்லும்.

உரைப்பாட்டு

சிலப்பதிகார காவியத்தில் இடையிடையே உரைப்பகுதி யும் சிலவிடத்துக் காணப்படுகிறது. அதனால் இக்காவியத் திற்கு 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்றும் ஒரு பெயர் வழங்கும். சிலப்பதிகாரத்துள் வரும் உரைநடையும் பாடலுக்குரிய எதுகை மோனை நயத்துடன் கட்டுரைச் சுவைபடக் காணப்படுகிறது. பாவின் தன்மை கலந்த உரைநடை என்பது கருதி அக்காவியத்துள் வரும் உரைப்பகுதிகளை, 'உரைப்பாட்டுமடை' என்றே குறிப்பிடலாயினர்.

ஆசிரியப்பாவில் உரைநடைக்கூறு

ஆதிப்பாவாகிய ஆசிரியப்பா உரைநடை போன்ற அமைப்புடையதே.

> "பாவிரி மருங்கினைப் பண்புறத் தொகுப்பின்
> ஆசிரி யப்பா வெண்பா என்றாங்கு
> ஆயிரு பாவினுள் அடங்கும் என்ப''
>
> (தொல். செய்யு. 107)

எனத் தொல்காப்பியர் ஆசிரியப்பாவிற்கு முதன்மை தந்திருத்தலும் கருதத்தக்கது. ஆசிரியப்பாவிற்கு 'அகவற்பா' என்றும் ஒரு பெயருண்டு. இஃது ஒருவரை அழைத்துப் பேசும் முறையினது ஆதலின் அகவல் என்னும் பெயர் பெற்றது. அகவல் என்றால் அழைத்தல் என்பது பொருள். சங்கப்பாடல்களுள் பெரும்பாலனவும் அகவற்பாக்களே. ஆதியில் மக்களின் உரைநடைச் சாயலை ஒட்டிய இப்பாவகை பெருவழக்குப் பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்த்தென்றல் திரு. வி. க. தம்முடைய 'பொருளும் அருளும்' என்னும் நூலின் முன்னுரையில் கூறும் கருத்து இங்குப் பொருத்தமாகத் தோன்றுகிறது. அவர்தம் விளக்க வுரை வருமாறு :

"கண்கள் படலத்தால் மறைக்கப்பெற்ற
நாள்தொட்டுக் கருத்தொளியில் விளங்கும்
பொருள்களைப் பெரிதும் அகவற்பாவால்
வாய்மொழி வாயிலாக வெளியிட்டுவரு
கிறேன் அவ் வெளியீடு எனக்கு எளிமை
யாகிவிட்டது. அகவற்பா பழந்தமிழர்
கொண்ட ஒருவகை உரைநடை"

தமிழ் முனிவர் திரு. வி. க. கூறுமாறு அகவற்பா அடி வரையறைக்குட்பட்டு வருவதனால் அதனைப் பா என்கிறோம். இல்லாவிடில் அதனை உரைநடை என்னத் தட்டில்லை.

நூற்பாவின் ஆசிரியநடை

அகவற்பாவின் நடையினை ஒத்ததே நூற்பா எனப்படும் சூத்திரம்.

'அடிவரை யின்றி விழுமிதின் நடக்கும்
நூற்பா வகவல் சூத்திரம் என்ப" (பிங்கலம் 2069)

எனப் பிங்கல நிகண்டு "நூற்பா வகவல்" எனக்குறிப்பிடுதலும் நோக்கத்தக்கது.

உறழ்கலியில் உரையாடல்

கலிப்பா வகையுள் 'உறழ்கலி' என்பது ஒன்று. அதனை விளக்கும்போது, தொல்காப்பியர்,

'கூற்றும் மாற்றமும் இடையிடை மிடைந்தும்
போக்கின் றாகல் உறழ்கலிக் கியல்பே'
(தொல். செய்யு. 168)

என்கிறார். ஒருவர் ஒன்றுகூற அதற்கு மற்றொருவர் எதிர்மொழி உரைக்கும் வகையில் அமைவது இப்பாட்டு. எனவே, இதனை 'உரையாடல்-பாட்டுவகை' என்னலாம். 'சல்லாபம்' என்று பிங்கலம் கூறும்.

உரைவகை நடை நான்கு

அடிவரையற்ற பா என உரைநடையைத் தொல்காப்பியர் வகைப்படுத்தி அந்த உரைநடை நான்கு பகுதிகளாக அமையும் என்றும் விளக்கமுறத் தெரிவித்துள்ளார்.

'பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின்று எழுந்த கிளவி யானும்
பொருள்மர பில்லாப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்
உரைவகை நடையே நான்குஎன மொழிப'
(தொல் செய்யு. 173)

என்னும் தொல்காப்பியர் வாக்கில் இவை அவர் காலத்திற்கு முன்பே வழங்கிவரும் மரபாகும் என்பதனைப் புலப்படுத்து வாராய், 'உரைவகை நடையே நான்கு என மொழிப' எனப் பிறர் கூற்றாக எடுத்துரைத்தலால் இம்மரபு மிகப் பழமை யானது என்பதும் வினக்கமாகும்.

பண்டைநாளில் நிலவிய மேற்குறித்த நால்வகை உரை நடையின் பாங்கினைச் சற்றுக் காண்போம். இவை பற்றிய விளக்கம் முந்திய உரைகாரர்களைக் கண்ணாகக் கொண்டுதான் பெறமுடியும். எனவே, பழைய உரைகாரர் கருத்தை ஒட்டி இந்நால்வகை உரைநடை பற்றியும் அறிய முற்படுவோம்.

பாட்டிடை வைத்த குறிப்பு

நான்கு உரைவகை நடையுள் முதலாவது வகை நடை, பாட்டிடை வைத்த குறிப்பு: ஒரு பாட்டினிடையே உரையாடல் பற்றி வரும் பொருட்குறிப்பு என்பது இளம்பூரணர் கருத்து.
இதனை இவர் எடுத்துக்காட்டும்,

"ஊர்க்கா னிவந்த பொதும்பருள். என்னும் குறிஞ்சிக் கலியுள், 'இவளைச் சொல்லாடிக் காண்பென் தகைத்து' (கலித். 56) என்பது உரைக்குறிப்பு, ஒருஉக் கொடியியனல்லார்' என்னும் மருதக்கலியுள், 'கடியதமக் கியார் சொலத் தக்கரா மற்று' (கலித். 88) என்பதும் அது"

எனவரும் உதாரணங்களால் அறியலாகும்.

பேராசிரியரோ உரையும் பாட்டும் கலந்து வரும் இலக்கியம் எனக் கருதுகிறார். அவர்தம் உரைவிளக்கம் வருமாறு :

"ஒரு பாட்டினை இடையிடை கொண்டு நிற்கும் குறிப்பினால் வருவன உரை எனப் படும். என்னை பாட்டு வருவது சிறுபான்மை யாகலின்; அவை தகடூர் யாத்திரை போல்வன, மற்றும் பிறபாடை விரவியும் வருவனவோ வெனின் அவற்றுள்ளும் தமிழுரையாயின் எல்லாம் பாட்டிடை வைத்த குறிப்பு என ஈண்டு அடங்கும். பிறபாடைக் காயின் ஈண்டு ஆராய்ச்சி இன்றென்பது. சூத்தி ரத்தாற் சொல்லாத பொருளினை உரை யாற் சொல்லித் தொடர்புபடுப்பது பாட்டிடை வைத்த குறிப்பாவது."

இவற்றால் நூலினிடையே வரும் பாடல்களை இணைத்துத் தொடர்புபடுத்த வரும் உரைநடை என்று கொள்ளலாம்.

பின்னர்த் தொன்மைவனப்புப் பற்றிக் கூறுமிடத்துத் தொல்காப்பியர்,

'தொன்மை தானே
உரையொடு மிடைந்த பழமை மேற்றே'
(தொல். செய்யு. 237)

என்று விளக்கம் தருகிறார். உரை விரவிவரப் பழைய வாகிய கதையைப் பொருளாகக் கொண்டு செய்யப் பெறுவது தொன்மை வனப்பு என்பதாம். இதற்குப் பெருந்தேவனாரால்

பாடப்பட்ட பாரதமும் தகடூர் யாத்திரையும் போல்வன என்று விளக்கம் தருகிறார் பேராசிரியர்.

பாவின்று எழுந்த கிளவி

இரண்டாவது வகை நடை பாவின்று எழுந்த கிளவி. ஒரு பொருளைக் குறித்து ஒருவர்க்கொருவர் உரையாடுவதை இது குறிக்கும் என்கிறார் இளம்பூரணர். பின்வரும் பகுதி அவர் தரும் விளக்கமாகும்.

> "பாக்களை ஒழியத் தோற்றிய சொல்வகை
> யானும் உரையாம் என்றவாறு. அஃதாவது
> வழக்கின்கண் ஒருபொருளைக் குறித்து வினவு
> வாரும் செப்புவாரும் கூறும் கூற்று. அதுவும்
> இலக்கணம் பிழையாமற் கூறவேண்டுதலாலும்
> ஒரு பொருளைக் குறித்துச் சொல்லப்படுதலாலும்
> செய்யுளாம். இதனைக் குறித்தன்றே 'செப்பும்
> வினாவும் வழாஅல் ஓம்பல்' (கிளவி. 13)
> என்பது முதலாகக் கூறப்பட்ட இலக்கணம்
> எல்லாம் என்று கொள்க."

பேராசிரியரின் கருத்து வேறு வகையாயுள்ளது. ஏதேனும் ஒரு பாடலுக்கு உரிய பொருளை மட்டும் எடுத்து எழுதுவது தான் பாவின்று எழுந்த கிளவி என்பது அவர் தரும் விளக்கம்?

> "பாட்டு இன்றிச் சூத்திரத்திற்குப் பொருள்
> எழுதுவது போல்வன. சூத்திரம் பாட்டு
> எனப் படாவோ எனின், படா, பாட்டும்
> உரையும் நூலும் என வேறு ஓதினமையின்.
> ......வேறொருவன் சூத்திரத்திற்
> கூறிய பொருளையே மற்றொருவன்
> கூறுகின்றான் ஆதலான் என்பது......
> அவை பாரதம், பருப்பதம் முதலியன."

இங்கே இவர் காட்டும் பாரதம், பருப்பதம் என்பன தெளிவாக விளங்கவில்லை. அப்பெயர்களையுடைய நூல்களில் அமைந்த பாடல்களை அடியொற்றி அமைந்த உரைநடை நூல்களைக் குறிக்கும் போலும்.

பொருள் மரபு இல்லாப் பொய்மொழி

மூன்றாவது வகை நடை பொருள் மரபு இல்லாப் பொய்ம் மொழி. இதற்குப் 'பொருள் இயைபில்லாப் பொய்மொழி யானும் உரைவரும் என்றவாறு' எனவரும் இளம்பூரணர் உரை விளக்கமாயில்லை. பேராசிரியர், பேசும் ஆற்றல் இல்லா விலங்குகளைப் பேசுவது போல வைத்து எழுதப்படுவது என் கிறார். எனவே பஞ்சதந்திர உரைநடை போல்வதே இது என்பது தெளிவு.

> "ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து
> சொல்லுவன, அவை, ஓர் யானையும்
> குரீஇயும் தம்முள் நட்பாடி இன்னுழிச்
> சென்று இன்னவாறு செய்தன என்று
> அவற்றுக்கு இயையாப் பொருள்படத்
> தொடர்நிலையான் ஒருவனுழை ஒருவன்
> கற்று வரலாற்று முறையான் வருகின்றன"

என்பது பொருள் மரபு இல்லாப் பொய்ம்மொழி என்பதற்குப் பேராசிரியர் தரும் விளக்கமாகும்.

பொருளொடு புணர்ந்த நகைமொழி

நான்காவது வகை நடையாகத் தொல்காப்பியர் சுட்டும் உரைநடை பொருளொடு புணர்ந்த நகைமொழி. மேலே சுட்டிய பொய்ம்மொழி உரையாடல் போலாது உலகியற் பொருள்களை விலங்கின் வாயிலாக வெளியிடுவதாகும். இக் கருத்துப் பின்வரும் இளம்பூரணர் தரும் விளக்கத்தால் வெளிப் படக் காணலாம்.

> "பொருளைப் பொருந்திய நகைமொழியாய்
> வருகின்றது என்றவாறு. நகைமொழியாவது
> மேற்சொல்லப்பட்ட உரை பொருந்தாது என
> இகழ்ந்து கூறுதல். அவ்விகழ்ச்சியின் பின்னார்ப்
> பொருளுணர்த்தும் உரை பிறக்குமாதலின்
> பொருளொடு புணர்ந்த நகை மொழியானும்
> உரைவரும் என்றார்."

பேராசிரியரின் கருத்தும் இளம்பூரணரை ஒத்தே அமைந்துள்ளது. அவர் தரும் விளக்கம் வருமாறு :

"பொய்யெனப் படாது மெய்யெனப்பட்டும்
நகுதற்கு ஏதுவாகும் தொடர்நிலை அதுவும்
உரை எனப்படும். அவையாவன : சிறு குரீஇ
யுரையும் தந்திரவாக்கியமும் போல்வன
எனக் கொள்க. இவற்றுட் செய்யப்படும்
பொருள் பொய் எனப் படாது உலகிய
லாகிய நகை தோற்றும் என்பது."

நூலுக்கு விளக்கம் தரும் இருவகை உரை

தொல்காப்பியச் செய்யுளியலில் எடுத்துக்காட்டிய நால் வகையும் உரைவகைநடை பற்றிய செய்திகளேயாம். இனி நூலுக்கு விளக்கம் தரும் உரைபற்றியும் தொல்காப்பியர் மரபியலில் எடுத்துச் சொல்லியுள்ளார். இதனைப் பேராசிரியர், "உரைநடை என்னாது 'வகை' என்றதனான் இவ்வுரைப்பகுதி பிறிதும் ஒன்று உண்டு. அது மரபியலுட் படுத்துச் சொல்லுதும்" என இங்கேயே தோற்றுவாற் செய்கின்றார்.

மரபியலில் நூற்பாத் தொடர்பாகக் காண்டிகையுரை அகலவுரை பற்றிய விளக்கம் காணப்படுகிறது. காண்டிகை யுரை என்பது நூற்பாவின் பொருளை விளக்கும் பொழிப்புரை போன்ற சுருக்கவுரை. அகலவுரை அங்குச் சொல்லப்பட்ட பொருளையும் அதனோடு இயைபுடைய பொருள்களையும், உட்பொதிந்த குறிப்புப் பொருள் முதலியவற்றையும் விரிவாக எடுத்து விளக்கும் பேருரையாகும். இதனையே அகலவுரை, விருத்தியுரை, எனப் பின்பு வழங்கலாயினர்.

காண்டிகையுரை

காண்டிகையுரை பற்றிய இரு நூற்பாக்கள் தொல்காப்பியத்துள் காணப்படுகின்றன;

'பழிப்பில் சூத்திரம் பட்ட பண்பின்
கரப்பின்றி முடிவது காண்டிகை ஆகும்,
'விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங்கு அமைந்த மெய்ந்நெறித்ததுவே.

(தொல். மரபு. 101, 102)

என இரு நூற்பாக்களில் தொல்காப்பியர் காண்டிகையுரையின் இயல்பினை விளக்கியுள்ளார். சூத்திரத்துட்கண்ட பொருளை விளக்குவதோடு அதனை ஏதுக்காட்டி விளக்கியும் எடுத்துக் காட்டுகள் தந்தும் அமைவது.

அகலவுரை

சூத்திரப்பொருளைப் பட்டாங்கு உரைக்கும் காண்டிகை போலாது சூத்திரப் பொருளேயன்றி அதற்கு இன்றியமை யாதன எல்லாம் உடன் விளக்கப்படுவது உரையாகும் என்கிறார். இங்கே அவர் உரை எனக் குறிக்கும் அகலவுரை குறித்தும்,

'சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை எல்லாம்
ஒன்ற உரைப்பது உரைஎனப் படுமே
'மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்த நூலானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்'.

(தொல். மரபு. 103-104)

என இருநூற் பாக்களில் அகலவுரையின் இயல்பினை விளக்கி உரைக்கிறார்.

நாலடியார் சுட்டும் உரையியல்

நூற்பாவுக்கு எனத் தொல்காப்பியர் தரும் விளக்கம் பிற வகைப் பாடல்களுக்கும் ஒக்கும் பாடல்களுக்குப் பொருள் விளக்கம் தரும் உரைமுறையும் தொன்று தொட்டு வருவதே என்பதும் தெரியவரும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய நாலடியார் ஒரு நூலிற்கு இயற்றப்படும் உரைபற்றி

'பொழிப்பு அகலம் நுட்பம் நூலெச்சம் இந்நான்கின்
கொழித்து அகலம் காட்டாதார்
சொற்கள்—பழிப்புஇல்
நிரைஆமா சேக்குர் நெடுங்குன்ற நாட
உரைஆமோ நூலிற்கு நன்கு' (32:9)

என ஒரு பாடலில் தெரிவிக்கிறது. இங்கே பாடலுக்குப் பொழிப்புரை, அகலவுரை, நுட்பவுரை, எச்சவுரை என நான்கு

வகையாக உரை அமைதல் வேண்டும் என்பது அறிவுறுத்தப் படுகிறது. இவற்றுள் பொழிப்புரை என்பது பாடல் சுட்டும் சொற்பொருள்களை ஒருசேரத் தொகுத்து உரைப்பதாகும். எனவே இதனைத் 'தொகுப்புரை' என்றும் கூறலாம். அகல வுரை என்பது பாடற் சொற்பொருள்கள் ஒவ்வொன்றையும் எடுத்து மிகவும் விளக்கமாக உரைத்தலாகும். இதனைப் பின்னாளில் விருத்தியுரை என வழங்கலாயினர். இலக்கண நுட்பம், உட்பொதி குறிப்புப்பொருள் நுட்பம் ஆகியவற்றை அணுகி ஆராய்ந்து உரைப்பது நுட்பவுரையாம். எச்சவுரை யாவது பாடற்பொருளோடு தொடர்புடையனவாய் எஞ்சி நிற்கும் பிறபொருள்களையும் உடன் எடுத்துக் கூறுதலாம். ஒப்புமைப் பகுதி காட்டல் போன்றவற்றை இதன்பாற் படுத்தலாம். தொல்காப்பியர் காலத்து உரை மரபு நாலடியார் காலத்து நான்கு கூறாகப் பகுத்துக் காணும் மரபாக புலவர் களால் போற்றப்பெற்றமை தெரியவரும்.

இறையனார் களவியலுரையில் உரை விளக்கம்

கி பி. ஏழாம் நூற்றாண்டளவில் தோன்றியது எனக் கருதப்படும் இறையனார் களவியல் உரைகாரர் அந்நாளில் நிலவிய உரைகூறும் முறைமைகளை முதற்கண் எடுத்துரைத் துள்ளார்.

> "இனிச் சூத்திரம் நுதலியதும் உரைக்கற்
> பாலது. சூத்திரம் உரைக்கின், அது நான்கு
> வகையான் உரைக்கப்படும். அஃது உரைக்கு
> மாறு கருத்துரைத்துக் கண்ணழித்துப்
> பொழிப்புத் திரட்டி அகலம் கூறல் என.
> 'இச் சூத்திரத்திற்குக் கருத்து என்னையோ'
> எனின், இவ் அதிகாரத்துள் உரைக்கின்ற
> பொருள் இன்னது என்பதூஉம், இன்னத
> னோடு ஒக்கும் என்பதூஉம் உணர்த்துதல்
> நுதலிற்று. அன்னதாதல் இச் சூத்திரம்
> கண்ணழிப்ப விளங்கும். கண்ணழித்தல்
> என்பது பதப்பொருள் சொல்லுதல். பொழிப்
> புத்திரட்டல் நுதலிய பொருளை நிரல்
> படத்தொகுத்து உரைததல், இனிச் சூத்
> திரத்துப் பொருளைத் தூய்மை செய்தற்குக்

கடாவிடை உள்ளுறுத்து உரைக்கும் உரை
எல்லாம் அகலவுரை எனக்கொள்க.”

(இறையனார் களவியல் – பவானந்தர்
கழகப் பதிப்பு. பக். 17 - 18)

உரைவளர்நிலை

நாலடியார் கூறுமாறு நான்குவகைக் கூறுபாட்டினை இவ்வுரைக்காரர் சுட்டிய போதிலும் கருத்துரைத்தல், கண்ணழித்தல் என்னும் இரண்டும் புதுமையாம். பொழிப்புரையாகவே முன்புவந்த உரை மரபிற்கும் முற்படக் கருத்துரைத்தல், கண்ணழித்தல் என்னும் ஒரு புதுக்கூறுகள் வளர்நிலையுற்றமை தெரியவரும் நாலடியார் உரைத்த நுட்பவுரை, எச்சவுரை, என்ற பாகுபாட்டினை இவர் கொள்ளவில்லை. அவையும் ஒருவகையில் அகலவுரையின் கூறாகவே அமையும் என்பதால், அவையெல்லாம் அடங்க 'அகலவுரை' என ஒன்றே உரைத்தனராதல் வேண்டும். இந் நிலை உரை மரபுகளின் வளர்நிலையச் சுட்டுவதாகக் கொள்ளலாம்.

யாப்பருங்கல விருத்தி சுட்டும் பலவகை உரை மரபுகள்

யாப்பருங்கல விருத்தியுரைகாரர் காலத்தில் பல்வேறு வகையான உரை மரபுகள் வழக்கில் இருந்தமை தெரிய வருகிறது. பண்டைநூல் உரைகாரர் பலரும் வாழ்ந்த காலத்தை அடுத்தவராதலின் இவர் பலத்திறப்பட்ட உரை மரபுகளையும் தம் உரையுள் எடுத்துக் காட்டினார் என்னலாம். இவ்வுரைகாரர் தரும் உரைமரபு விளக்கம் வருமாறு :

“சூத்திரப்பொருள் உரைக்கின்றுழிப் பலதிறத்தானும் உரைப்ப. என்னை ?

'முத்திறத் தானும் மூவிரு விகற்பினும்
பத்துவிதத் தானும் பதின்மூன்று திறத்தானும்
எழுவகை யானும் இரண்டுகூற் றானும்
வழுவுநனி நீக்கி மாண்பொடும் மதமொடும்
யாப்புறுத் துரைப்பது சூத்திர உரையே'

(யாப்பருங்கலவிருத்தி-பாயிரம்)

என்பதாகலின்,

அவற்றுள் *முத்திறமாவன* : பொழிப்பு, அகலம், நுட்பம், என இவை.

மூவிரு விகற்பமாவன: எடுத்துக்காட்டல், பதங்காட்டல், பதம் பிரித்தல், பதப்பொருள், வினாதல், விடுத்தல் என இவை.

பத்துவிதமாவன :

'சொல்லே சொற்பொருள் சோதனை மறைநிலை
இலேசே எச்சம் நோக்கே துணியே
கருத்தே செறுத்தல் என்றீ ரைந்து
கிளவியும் நெறிப்பட வருவது
பனுவலுரையென் றோதப் பட்டன''.

பதின்மூன்று திறமாவன: சூத்திரந்தோன்றல், சொல் வகுத்தல், சொற்பொருளுரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடங்காட்டல், உதாரணங்காட்டல், ஆசிரிய வசனம் காட்டல், அதிகார வரவுகாட்டல், தொகுத்து முடித்தல், விரித்துக்காட்டல், துணிவு கூறல், பயனொடு புணர்த்தல் என இவை.

எழுவகையாவன : பொழிப்பு, அகலம், நுட்பம், நூலெச்சம், பதப்பொருள் உரைத்தல், ஏற்புழிக்கோடல், எண்ணல் என இவை.

இரண்டு கூறாவன: தொகுத்துக்கண்ணழித்தல், விரித்துக் கொண்டுரைத்தல்.

வழுவாவன: குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியது கூறல், மாறுகொளக்கூறல், வழூஉச் சொற்புணர்த்தல், மயங்க வைத்தல், வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயனின்மை.

மாண்பாவன : சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணர்த்தல், ஓசை யுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின் வைப்பு, உலக மலையாமை, விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்தாகுதல்.

எழுவகை மதமாவன : உடன்படல், மறுத்தல், பிறர்தம் மதமேற்கொண்டு களைவு, தாஅனாட்டித் தனாது நிறுப்பு, இருவர் மாறுகோள் ஒருதலை துணிவு, பிறநூற் குற்றம் காட்டல், பிறிதொடுபடான் தன்மதம் கொளல்.

நன்னூலில் காணும் தெளிவு :

நன்னூலின் பொதுப்பாயிரத்தில் பவணந்தி முனிவர் உரையின் பொதுவிலக்கணம், காண்டிகையுரை, விருத்தியுரை

இலக்கணங்கள் ஆகியவற்றைத் தெளிவுற எடுத்துக்காட்டியுள்ளார்.

பதினான்கு வகையான் உரைவிளக்கப் பகுத்துரைக்கப்படும் என்பதனை,

'பாடம் கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனொடு
ஆசிரிய வசனம்என் றீரெழ் உரையே'

(நன். பொதுப். 21)

என்னும் நூற்பாவில் தொகுத்துத் தந்துள்ளார். அடுத்துக் காண்டிகையுரை குறித்து,

'கருத்துப் பதப்பொருள் காட்டு மூன்றினும்
அவற்றொடு வினாவிடை ஆக்க லானும்
சூத்திரத் துட்பொருள் தோற்றுவ காண்டிகை'

(நன். பொதுப். 22)

என அவ்வுரையில் இடம்பெறும் ஐந்து கூறுகளைச் சுட்டியுள்ளார்.

''சூத்திரத் துட்பொருள் அன்றியும் ஆண்டைக்கு
இன்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறர்நூ லானும்
ஐயம் அகலஐங் காண்டிகை உறுப்பொடு
மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி'

(நன். பொதுப். 23)

என விருத்தியுரையின் இயல்பினை விளக்குகிறார். பதின்மூன்றாம் நூற்றாண்டினரான இவர் முன்னையோர் உரைமரபுகளை நன்கு தெளியவுணர்ந்து தொகுத்தும் வகுத்தும் காட்டியுள்ளார் என்னலாம்.

பழைய இலக்கிய உரைகளின் தன்மை :

பழைய இலக்கிய உரைகளுள் பெரும்பாலனவும் பொழிப்புரையாயும் அரும்பதவுரையாயும் காணப்படுகின்றன. இன்றியமையாது வேண்டப்படும் இடங்களில் சொற்பொருள்

விளக்கமும் இலக்கண முறைமையும் காட்டப்பட்டுள்ளன. குறிப்பெச்சமாய்த் தொனிக்கும் உட்பொருள்களும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

பாடலுள் சொற்கிடக்கை முறையில் உரை

புறநானூற்றின் பழைய உரையும் புறப்பொருள் வெண்பாமாலைக்குச் சாமுண்டி தேவ நாயகர் இயற்றிய உரையும் பாடலுள் சொற்கள் அமைந்து கிடக்கும் வகையிலேயே உரை விளக்கம் தருவனவாகும். பாடலின் சொல் - தொடர்களைப் பொருள் முடிவிற்கு ஏற்பக் கொண்டுகூட்டிப் பொருளுரையாது பாட்டிடை அவை கிடந்தவாறே உரை வரைந்திருப்பது இவற்றின் தனிச்சிறப்பாகும். புறநானூற்று உரையில் பாடலுக்குரிய பொழிப்புரை முடிந்தபின் இங்ஙனம் வினை முடிவு செய்க, இவ்வாறு மாறிக் கூட்டுக என்றாற் போலப் பாடலின் பொருட்போக்கிற்கு இயையத்தரும் குறிப்புக் காணப்படுகிறது.

புறநானூற்றின் பழையவுரை

புறநானூற்றின் பழையஉரை குறித்து டாக்டர் உ. வே. சாமிநாதையர்,

> "இந்நூற்குக் கிடைத்தவுரை பதப்பொருளை
> இனிதுவிளக்கி உரிய இடங்களிற் சொற்களை
> முடித்துக்காட்டி இலக்கணக் குறிப்பையும்
> திணை துறைகளையும் ஆங்காங்குள்ள
> பழமொழிகளையும் அணியையும்
> சொல்நயம் பொருள்நயங்களையும்
> புலப்படுத்துவது"

என்று குறிப்பிட்டுள்ளார். இங்ஙனம் அமையும் உரை விளக்கமே சுருங்கிச் சொல்லல், மிகைபடக் கூறல் என்னும் குற்றங்கள் இன்றி அளவொடுபட்டனவாய் அமையும் என்பதும் நோக்கத்தக்கது.

நச்சினார்க்கினியரின் உரைநலம்

நச்சினார்க்கினியரின் இலக்கிய இலக்கண உரைகளைப் புலவர்கள் வழிவழி உச்சிமேல் வைத்துப் போற்றி வந்துள்ளனர். தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி ஆகியவற்றிற்கு இவர் எழுதியுள்ள உரைகள் திட்ப நுட்பம்

செறிந்தவை. இன்றியமையாத இடங்களில் மட்டும் பதப் பொருள், இலக்கணக் குறிப்பு முதலியவற்றை இவர் எழுதும் இயல்பினர். இவர் எழுதும் சொல்நயம் மிகவும் பாராட்டற் பாலதாம். பழைய செய்யுள்களையேனும் அவற்றின் கருத்தை யேனும் இவர் உரைநடையாக எழுதுவதும் உண்டு உரையில் மேற்கோளாக எடுத்துக்காட்டும் பொழுது நூலின் பெயரையாவது நூலாசிரியர் பெயரையாவது எடுத்துக் கூறுதல் பெரும்பாலும் இவர் வழக்கமன்று. வெளிப்பட விளக்கம் பெறாத இடத்தும் சிற்சில குறிப்புகளைக்கொண்டு இன்ன காலத்து இன்ன செய்தி நிகழ்ந்தது என்று சிந்தாமணி யுரையில் இவர் காட்டியிருப்பது கருதத்தக்கது. விரிவிற்கு அஞ்சி ஒரு வாக்கியத்தின் இறுதிச் சொல்லையேனும் அதன் முதற்சொல்லையேனும் எழுதி வாக்கியத்தைக் குறித்துவிட்டுப் பொருள் விளக்கம் எழுதும் வழக்கமுடையவர். மேலே சுட்டிய வகையில் யாதொன்றும் எழுதாமலே சிலவிடத்துப் பொருள் எழுதுதலும் செய்கின்றார். தாம் எடுத்துக்கொண்ட நூலின் சமயத்தையும் நூலாசிரியருடைய கொள்கைகளையும் அறிந்து அவ்வவற்றிற்குப் பொருத்தமாக உரை வகுத்தலும் உண்டு.

பத்துப்பாட்டு உரையில் மாட்டுநெறி

நீண்ட பெரும் பாடல்களைக் கொண்ட பத்துபாட்டு உரையில் தொல்காப்பியர் சுட்டிய மாட்டு என்னும் உறுப்பின் தன்மையை உளங்கொண்டு சொற்களைப் பல்வேறு வகையில் கொண்டுகூட்டிப் பொருள் உரைப்பர்.

> ''அகன்றுபொருள் கிடப்பினும் அணுகிய நிலையினும்
> இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
> மாட்டுஎன மொழிப பாட்டியல் வழக்கின்''

(தொல். செய்யு. 211) என்னும் மாட்டிலக்கணத்தான் இப் பாட்டுக்கள் பத்தும் செய்தார்கள் ஆதலின் இவ்வாறே மாட்டி முடித்தல் யாண்டும் வரும் என்று உணர்க.'' என நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுப்படையுரையில் குறிப்பிடு தலும் நோக்கத்தகும்.

அகப்பாடல் உரை

அகத்துறைப் பாடல்களுக்கு உரை வரையும் காலத்து உரைக்காரர்கள் தொல்காப்பிய நெறி நின்று துறைகளைத் துலக்குகின்றனர். இவ்வகைப் பாடல்களில் குறிப்பிசைப்

பொருளாய் இடம்பெறும் உள்ளுறை யுவமம், இறைச்சிப் பொருள் ஆகியவற்றை உரிய இடங்களில் விளக்கிச் செல்வதும் காணலாகும்.

பொருள் கோள் முறை

பாடல்களில் இயற்கையாகவே தம்முட்கூடிப் பொருளுணர்த்தும் சொற்கள் அங்ஙனம் இயற்கையாகக் கூடிப் பொருளுணர்த்தாது விகாரப்பட்டுப் பொருளுணர்த்துதலும் உண்டு. இவ்வாறு சொற்கள் பொருளுக்கு இயையப் பாடல்களில் மாறிச் சேர்தலை 'மொழிபுணர் இயல்பு' எனத் தொல்காப்பியர் சுட்டுவர். இவற்றையே பிற்காலத்து வந்த இலக்கணகாரர் 'பொருள்கோள்' என்னும் பெயரால் குறிப்பாராயினர்.

தொல்காப்பியர் சுட்டும் நால்வகை

தொல்காப்பியர் சொல்லதிகார எச்சவியலில்,

"நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவைநான் கென்ப மொழிபுணர் இயல்பே"
(தொல். சொல். 404)

என்று தொகுத்துச் சுட்டி அடுத்துவரும் நூற்பாக்களில் முறையே நிரனிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று ஆகியவற்றின் இயல்புகளை (தொல். சொல். 405-409) நன்கு விளக்கியுள்ளார்.

மொழி மாற்றும் மாட்டும்

மொழிமாற்று என்பதனோடு செய்யுளுள் வரும், மாட்டு என்னும் உறுப்பும் மொழிகளை மாற்றிக்கூட்டிப் பொருள் காண்பதாகும். இவற்றிடையே உள்ள வேறுபாட்டினையும் நச்சினார்க்கினியர் சொல்லதிகார உரையுள் ஓரிடத்துச் (409) சுட்டிக் காட்டுதலும் நுணுகிக்காணத்தக்கது.

"மொழிமாற்றாவது கேட்டோர் கூட்டி
உணருமாற்றால் ஈரடிக்கண்ணே வருவது
என்றும், மாட்டு என்னும் உறுப்பாவது
பலவடிக்கண்ணும் பல செய்யுள் தொடரின்
கண்ணும் அகன்றும் அணுகியும் வரும் என்று

உணர்க, அஃது,

"அகன்று பொருள் கிடப்பினும் அணுகிய
நிலையினும்
இயன்றுபொருள் முடியத் தந்தனர் உணர்த்தல்
மாட்டென மொழிய பாட்டியல் வழக்கின்"

என்னும் செய்யுளியல் நூற்பாவினால் (210) உணர்க.

பூட்டுவிற்பொருள்கோளும் அளைமறி
பாப்புப் பொருள்கோளும் தாப்பிசைப்பொருள்
கோளும் கொண்டுகூட்டுப் பொருள் கோளும்
மாட்டு என்னும் உறுப்பின்கண் அடங்கு
மாறும் யாற்றொழுக்குப் பொருள்கோள்
யாப்பு என்னும் உறுப்பின்கண் அடங்குமாறும்
உணர்க."

இங்கே நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டும் பூட்டுவிற் பொருள்கோள் முதலியன பிற்கால இலக்கணகாரர்களால் எடுத்துரைக்கப்பெற்றன. யாற்றுநீர்ப் பொருள்கோள் முதலியன தொல்காப்பியர் வகுத்துக் காட்டிய யாப்பு, மாட்டு என்னும் செய்யுள் உறுப்புகளுள் அடங்குவனவே என்பதனை நச்சினார்க்கினியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

எண்வகைப் பொருள்கோள் :

யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு
அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே"

என நன்னூலில் (411) பவணந்தி முனிவர் தொகுத்துச் சுட்டி இவ்வெட்டன் இயல்புகளையும் தனித்தனி முறையே விளக்கியுள்ளார் (நன். 412-419).

நான்கிற்கு மேற்பட்ட பொருள்கோள்கள் :

நன்னூல் மயிலைநாதர் உரையில் பொருள்கோள் நான்கு, ஐந்து, ஒன்பது என்னும் கொள்கையுடையாரும் உளர் என்பதனையும் எடுத்துரைத்துள்ளார் (நன். 410 உரை). அவர் தரும் விளக்கம் வருமாறு :

"இவற்றை

'நிரனிறை சுண்ணம் அடிமறி மொழிமாற்று
அவைநான்கு என்ப மொழிபுணர் இயல்பே'
(தொல், சொ, எச்ச. 8)

என நான்காகவும்,

'பூட்டுவில் விதலை யாப்புக் கொண்டுகூட்டு
ஒருசிறை நிலையே பாசிநீக்க மென்று
ஆக்கிய ஐந்தும் பொருள்கோ ளாகும்'
என ஐந்தாகவும் இவ்வெட்டுடனே அடி
மொழிமாற்று என்பது ஒன்றுகூட்டி ஒன்ப
தாகவும் உரைப்பாரும் உளர். அவையும்
கூறிய எட்டனுள் அடங்கும் எனக் கொள்க."

நான்காகவும் அதற்கு மேலும் விரித்துக்கூறும் அத்தனை பொருள்கோள்களும் செய்யுளின் பொருட்போக்கை நமக்கு உணர்த்துவனவேயாகும்.

வீரசோழியம் சுட்டும் உரைநெறி

வீரசோழியத்தின் பொருளதிகாரத்தில் அதன் ஆசிரியர் புத்தமித்திரர் பொருள்களை அகப்பொருள், அகப்புறப் பொருள், புறப்பொருள், புறப்புறப்பொருள் என நான்கு வகைப்படுத்தி முதற்கண் காட்டுவர்.

இவ்வகைப் பொருள்கள் நான்கும் 27 வகை உரைகளைப் பெறும் என்று பொருள் விளக்கத்திற்காக எடுத்துரைக்கிறார் ஆசிரியர்.

"சட்டக மேதிணை கைகோள்
நடைசுட் டிடங்கிளவி
ஒட்டிய கேள்வி மொழிவகை
கோளுட் பெறுபொரு ளென்று
இட்டிகச் சொற்பொருள் எச்சம்
இறைச்சி பயன் குறிப்புக்
கட்டக மெய்ப்பாடு காரணம்
காலம் கருத்தியல்பே.
'ஏற்றும் விளைவொ டுவமம்
இலக்கணம் ஏய்ந்த தொல்லோர்
போற்றும் புடையுரை யேமொழி
சேர்தன்மை ஏயுமன்றி
ஆற்றும் பொருணடை வென்றா
முறையில் லவற்றினுக்கு

மாற்றும் உரையும் வகுக்கு
முரையும் வகுத்தறியே'
(வீரசோ. பொருளதி. பொருட் படலம் 5-6)

எனவரும் இரு காரிகைகளில் பொருளுக்கு உறுப்புகளாய் அமைந்த இருபத்தேழு பொருட் கூறுகளை எடுத்து இயம்பியுள்ளார் ஆசிரியர். இதற்குப் பெருந்தேவனார் தரும் உரை வகை விளக்கமானது.

'சட்டகமும், திணையும், கைகோளும்,
நடையும், சுட்டும், இடனும், கிளவியும்,
மொழியும், கோளும், உட்பெறு பொருளும்,
சொற்பொருளும், எச்சமும், இறைச்சியும்,
பயனும், குறிப்பும், மெய்ப்பாடும், காரண
மும், காலமும், கருத்தும், இயல்பும், விளைவும்,
உவமமும், இலக்கணமும், புடையுரையும்,
மொழிச் சேர் தன்மையும், பொருளடையும்
என்னும் இருபத்தேழும் அகப்பொருளினுக்கு
உரையாம். அகப்புறப்பொருளுக்கும்
புறப்புறப் பொருளுக்கும் ஏற்கும்
உரை அறிந்து கொள்க.

இவ்வாறு எண்தொகையாகத் தொகுத்துரைத்த சட்டகம் முதலிய ஒவ்வொன்றின் இயல்புகளையும் நன்கு விளக்கிச் செல்கிறார் உரையாசிரியர் பெருந்தேவனார். இவை பொருளாராய்ச்சிக் கூறுகளில் புகுவார்க்குப் பெரும்பயன் உடையதாம்.

உ. வே. சாமிநாதையர் கண்ட உரைமுறை

டாக்டர் உ. வே. சாமிநாதையர் தாமே உரைவரைந்த நூல்களுள் குறுந்தொகை உரையே முழுமையான பேருரையாகும். இவ்வுரையாக்கம் பற்றி அவர்குறிப் பிடும்போது,

''குறுந்தொகைச் செய்யுட்களுக்கு உரை
யெழுதுகையில் பிற சங்கநூற் செய்யுட்
போக்கையும் இலக்கண இலக்கியங்களில்
உரையாசிரியர்கள் புலப்படுத்திச் செல்லும்
மரபுகளையும் இயன்றவரையில் உணர்ந்து

> எழுதலானேன். உரைகளில் உரையாசிரி
> யர்கள் இந்நூலிலிருந்து மேற்கோள்
> காட்டும் செய்யுட்களுக்குச் சில இடங்
> களில் உரை எழுதியிருக்கிறார்கள். அவை
> எனக்குப் பெருந்துணையாக இருந்தன''

என்று தெரிவித்துள்ளார். மேலும் ஐயரவர்களின் இக்குறுந்தொகையுரை பதிப்புத்துறையில் அவர்கள் பல்லாண்டுகள் பெற்ற பயிற்சியின் விளைவாக மலர்ந்தது. அவர்தம் வாழ்வின் இறுதிப் பெரும்படைப்பாகவும் அமைந்தது.

சங்க நூற் பரப்பில் தாம்பெற்ற ஆழ்ந்த பயிற்சியெல்லாம் புலப்படும் வகையிலும் பண்டை நூல் உரைகாரர்கள் முதலியோர் நெறிகளைக்கூர்ந்து கவனித்துப் பொருள் நுட்பம் காட்டும் வகையிலும் குறுந்தொகை உரையினை ஆக்கியளித்துள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் உரிய பொருள்களையும் பன்னிருதலைப்புகளில் அமைத்து விளக்கியிருக்கும் அருமைப்பாடு வியப்புத்தருவதாயுள்ளது. 1. கூற்று, 2. கூற்றுவிளக்கம், 3. மூலம், 4. பிரதி பேதம், 5. பழைய கருத்து 6. ஆசிரியர் பெயர், 7. பதவுரை, 8. முடிவு, 9. கருத்து, 10. விசேடவுரை, 11. மேற்கோளாட்சி, 12. ஒப்புமைப்பகுதி என இவ்வாறு வகுத்து அமைத்து விளக்கம் தந்துள்ளமை காணலாம்.

இக்காலத்திற்கு ஏற்ற உரைநிலை

பாடலின் பொருளைப் பகுத்துப் பகுத்து நுணுகி அமைந்த இப்பேருரை இந்நாளில் கற்கமுற்படுவாரை மலைப்புறச் செய்யும். ஆகவே இந்நாளில் எழுதப்பெறும் உரை இக்காலத்தார் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் பாடற்பொருள் முழுமையும் அதன் சிறப்பு நலன்களும் விளங்கும் வகையில் அமைவதே ஏற்புடையதாயிருக்கும்.

இக்கருத்து 1940 - ல் வெளிவந்த சங்க இலக்கிய முகவுரையிலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

> ''பழைய உரைகளினுடைய திட்பத்தைப்
> பாதுகாத்து, இக்காலத்தவர் எளிதில் அறியக்
> கூடிய நடையில் எழுதப்பெறும் புத்துரையே
> தாங்கள் விரும்புவது என்றும் மேற்குறித்த
> தமிழாசிரியரும் மாணவர்களும் வற்புறுத்தி

னார்கள். பல் நண்பர்களோடு இதைப்
பற்றி நன்கு ஆலோசித்ததில் இப்பெருந்
தொண்டின் முற்பகுதியாக மூலத்தை மட்டும்
செம்மையாக அச்சிடுதல் நலம் என்பது
விளக்கமாயிற்று.'' (முகவுரை. பக். VI)

மேலே கண்ட குறிப்பை உளங்கொண்டு நோக்கும்போது சங்க நூல்களுக்குப் பாடற்பொருள் விளங்கப் புத்துரை அமைக்க வேண்டும் என்பது தெளிவாம்.

தமிழ்ப் பல்கலைக் கழகச் சங்க இலக்கிய வரிசை

சங்க இலக்கியங்களைப் படித்தறிதல் வேண்டும் என்று கருதும் ஆர்வலர்க்கும் நுணுகி ஆராய முற்படும் ஆய்வாளருக்கும் பயன்படும் வகையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிடவிருக்கும் சங்க இலக்கிய வரிசை நூல்கள் அமையும்.

பாடல்கள் எழுந்த சூழலை விளக்கும் திணை, கூற்றுப் பாகுபாடுகள், பாடலில் துறைப்பொருளை விளக்கும் பழங் குறிப்பு ஆகியவற்றோடு இக்காலத்திற்கு ஏற்ற நடையில் அமைந்த பொழிப்புரை தருவது முதன்மை நோக்கம். அருஞ்சொற்களுக்குப்பொருள், மரபுவழிக் குறிப்புகள், உள்ளுறை இறைச்சி எனப்படும் குறிப்புப் பொருள்கள் ஆகியவையும் வேண்டும் இடங்களில் விளக்கப்படுதலும் காணலாம்.

தொல்காப்பியர் வழி நிற்றல்

சங்க நூல்களுக்கு, உரிய இலக்கணம் தொல்காப்பியமாகிய மழந்தமிழ் நூலேயாதலின் அந்நூலின் உரைக்காரர் இந்நூற் பாடல்களை எடுத்துக்காட்டி விளக்கும் அகத்துறைக் குறிப்பு களும் ஆங்காங்குச் சேர்க்கப்பட்டுள்ளன.

பாட வேறுபாடுகள் :

பாட வேறுபாடுகள் மொழியாராய்ச்சி முதலியவற்றுக்கும் பயன்படுவதாதலின் சுவடிகளிலிருந்து தெரியவரும் வேறு பாடுகள் எல்லாம் கால அடைவில் அட்டவணைப் படுத்தித் தரப்பட்டுள்ளன.

பாடினாரும் பாடலின் பயின்ற பிறரும்

தொகை நூற் பாடல்களைப் பாடினார் பலராதலின் பாடினார் பெயர் அகர வரிசையும் அவர்களால் குறிக்கப் பெற்ற அரசர் முதலியோர் வரிசையும் தனித்தனி இணைப்புகளாக அமைக்கப்பட்டுள்ளன.

திணையும் துறையும்

திணைப் பகுப்புத் துறைப் பகுப்புகளும் வகுத்துக்காட்டப் பெறும். அகப்பொருள்களுக்கு அடிநிலையாய் அமைவன வாதலின் இவை பற்றிய விளக்கமும் கவனிக்கத்தக்கன.

தொடர் அகராதியும் ஒப்பீடும்

சங்கப் புலவர் வாக்கில் அமையும் தொடர்களிடையே பெரிதும் ஒப்புமை காணப்படுகிறது. ஒரு பொருளைப் பற்றி உரைக்குமிடத்து மரபுபோலத் தரப்படும் விளக்கங்களும் காணப்படுகின்றன. அடைமொழிகள், உவமைகள் முதலியவற்றிலுங்கூட ஓர் ஒருமைப்பாடு தென்படுகிறது. இவற்றையெல்லாம் ஒப்பிட்டு அறியப் பயன்படும் வகையில் தொடர் அகராதி ஒன்று தரப்படுதலும் இன்றியமையாததாகிறது.

சொல்லகராதி

சொற்பொருள், இலக்கண மரபுகள் ஆகியவற்றை ஆராய்ந்து அறியச் சொல்லகராதி இடம் பெறுதலும் வேண்டும். எனவே, சொல்லகராதியும் சேர்க்கப்படுகிறது.

சங்க நூல்களுள் சிலவற்றிற்குச் சொல்லகராதிகள் அச்சிலும் வந்துள்ளன. எஸ். ஆர். கிருஷ்ணம்பாள் ஆக்கிய குறுந்தொகை அகராதியை 1974 ஆம் ஆண்டு கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியிட்டுள்ளது.

வெளிவந்துள்ள சங்க நூல்களுக்கான அகராதிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான அமைப்புடையன. குறுந்தொகை அகராதியில் பாடபேதங்களையும் உடன் சேர்த்திருக்கின்றனர். புறநானூற்று அகராதியில் அச்சொல்லை ஆண்ட ஆசிரியர் பெயர் நினைப்புக் குறியீடும் இணைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு நோக்கில் சென்றுள்ளனர். அவற்றினடையே ஓர் ஒருமைப்பாடு இல்லை. தனித்தனிப் பதங்கள், தொடர்நிலை

யாய்த் தனிப்பொருள் பயின்று வருவன போன்றவற்றைத் தெரிந்து அமைப்பதிலும், மாறுபாடுகள் பல உள. எனவே, இங்குத் தக்க நியமங்களை வகுத்துத் தனியகராதி தொகுத்து அமைத்தலும் இன்றியமையாததாகின்றது.

தனித்தனி நின்று பொருள்தரும் பெயர்வினைகள், அவற்றைச் சார்ந்து வரும் இடைஉரிச் சொற்கள் எல்லாம் இணைந்தும் தனித்தனியும் நிற்கும் மரபு முறையில் இச் சொல்லகராதி அமைத்துத்தரப்பெறும். தனிப்பொருள் தந்து நிற்கும் சிறுசிறு தொடர்களும் உடன் இணைத்துத் தரப் பட்டுள்ளன. ஆகவே இந்தப் பதிப்பில் இடம்பெறவிருக்கும் சொல்லகராதி எந்த நோக்கில் காண்பாருக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழில் தான்...

திராவிட மொழிகளைப் பொறுத்த மட்டில் தமிழில் தான் கலைச் சொற்களின் செழுமையைக் காணலாம். தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் வடமொழிக் கலைச் சொற்களை ஆண்டிருக்கத் தமிழ் மொழியே மற்ற துறைகளில் காணப்படும் அதன் தனித் தன்மையும் வளர்ச்சியும் சிறப்பும் போன்று தனக்கே உரிய பான்மையில் தனித்தமிழ்க் கலைச்சொற்களைப் படைத்துக் கொண்டிருக்கின்றது. கலைச் சொற்களை, குறி(ப்பெயர்) எனத் தனித் தமிழ்ச் சொல்லால் தமிழிலக்கண அறிஞர் குறிப்பிட்டிருப்பது இங்கு நோக்கத் தக்கது.

—'முன்னுரை', தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1972, ப. xxix.

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கருத்து :- உவமச் சொல்லும் உவமத்தன்மையும் தொக்கு வருமாறும் அவற்றை விரித்துணருமாறும் பற்றிய இலக்கணம் கூறுகின்றது. அஃதாவது சொல்லதிகாரத்துள் தொகை மொழிகளுள் ஒன்றாகக் கூறிய உவமத்தொகைமொழியின் இலக்கணத்தைக் கூறுங்கால் "உவமத்தொகையே உவமவியல" எனத் தோற்றுவாய் செய்தமையான் ஈண்டு அவ் இலக்கணத்தை விதந்து கூறுகின்றார் ஆசிரியர்.

பொருள் : இவ்வுவமம் இப்பொருளை இன்னவாற்றான் விளக்கி நின்றது என உவமத்தின் உவமத் தன்மையை உவமச் சொல்லோடு கூட்டிக் கூறாமல் தொகுத்துக் கூறப்பெற்ற உவமத் தொடராயின், உவமிக்கப்படும் பொருட்கு எதிரே வினையும் பயனும் மெய்யும் உருவுமாகிய உவமத் தன்மைகளைப் பொருத்தி நோக்கி அவற்றுள் பொருந்துவனவற்றை அவ்வுவமமாகத் தேர்ந்து கொள்க.

"விரவியும் வரூஉம் மரபின" வாதலின் "புணர்ந்தனை கொளலே" எனப்பன்மையாற் கூறினார். கூட்டிக்கூறுதலாவது கருதிய உவமத்தன்மை விளங்க விரித்துக் கூறுதலாம்.

உவமத் தொகைமொழியிலும் உவமத் தொடரிலும் உவமப்பொருளும் உவமிக்கப்படும் பொருளும் விரிந்தே நிற்குமாதலின் "கூட்டிக் கூறா உவமம்" என்றது உவமத்தன்மையையும் உவம உருபுச் சொல்லையும் என்பது தாமே போதரும்.

இவ்வாசிரியர் முன்னையோர் மரபு பற்றி அன்ன ஆங்க முதலிய உவமச் சொற்களை உவமம் என்று குறியீடு செய்து ஓதுவராகலின் கூட்டிக் கூறா உவமமென உவமத் தன்மையையும் உருபையும் ஒருங்குணரப் பொதுப்பட ஓதினார் என்க.

தொடர் மொழிக்கண் உவம உருபு தொக்கு வருதலை உவமத் தொகைத் தொடர் என்றும் தொகை மொழிக்கண் உவம உருபும் உவமத் தன்மையும் ஒருங்கு தொக்கு வருதலை உவமத் தொகைமொழி என்றும் வழங்குதல் இந்நூல்நெறி என்பதனை எச்சவியலுள் விளங்கக் கூறினாம். ஈண்டுச்

சுட்டிக் கூறா உவமம் என்றது தொடர்மொழி தொகை மொழிகட்குப் பொதுவாக நின்றதென்க.

வரலாறு :- "பவளம் போற் செந்துவர்வாய்" என்பது உவமையும் உருபும் விளங்க எடுத்துக்கூறிய உவமத்தொடர், இனி அத்தொடர் தன் மொழிப்பொருள் சிதையாமல் 'பவள வாய்' எனவருதல் சுட்டிக் கூறா உவமத்தொகை மொழியாம்.

இனிப்பவளம் போலும் வாய் என்பதும் பவளச் செவ்வாய் என்பதும் சுட்டிக் கூறா உவமத்தின் பாற்படும். என்னையெனின் பவளம் போலும் வாய் என்பதன்கண் உவமத் தன்மையும் பவளச் செவ்வாய் என்பதன்கண் உவம உருபும் விரியாமை யான் என்க. இவற்றுள் முன்னது உவமைத் தொகை எனவும் பின்னது உவம உருபுத் தொகை எனவும் விளக்கப் பெறும்.

இவ்விலக்கண நெறியை நெகிழ்த்து உவம உருபிலது உவமத் தொகையே" என்னும் நன்னூற் சூத்திரத்தையும் பிற இடைக்கால இலக்கண நூல்களையும் இலக்கணமாகக் கருதிக் கொண்டு அவற்றின் வழித் தொல்காப்பிய மரபினை நோக்குதல் ஒவ்வாதென அறிக.

இச்சூத்திரத்திற்குரிய இளம்பூரணருரை சிதைவுற்றுப் பின்செப்பஞ் செய்யப் பெற்றுள்ளது என்பதை ஊன்றி நோக்கின் உணரலாம் அவ்வுரையுள் காணப்படும்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

என்னும் எடுத்துக்காட்டினை நோக்கின் சுட்டுச் சொல்லும் உவம உருபுமின்றி வருவது சுட்டிக் கூறா உவமம் என்பது அவர் கருத்தாதல் புலப்படும். தண்டியலங்கார உரையாசிரியர் இக்குறட்பாவை எடுத்துக் காட்டி இது தொகையுவமம் என்பார். அதனான் உவம உருபின்றி வருவது தொகையுவமம் என்பது அவர் கருத்தாதலை அறியலாம்.

உவம உருபினை விரித்துக் கூறாமல் உவமத்தை எடுத்துக் காட்டிய அளவே நிற்றலான் இதனை எடுத்துக்காட்டுவமை என்பர். உரையாளர் உவமம் யாவுங் எடுத்துக்காட்டப் பெறுவனவேயாதலின் அங்ஙனங் குறியீடு செய்தலாற் பயனின்மையறிக. அதனான் சுட்டிக்கூறா உவமம் என்பதன் நுட்பமும் இலக்கணமும் வெளிப்படாமையும் உணர்க.

சூ. 8 :- உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்.

கருத்து :- சுட்டிக் கூறாத வழித் தொக்கு நிற்கும் உவத் தன்மையைப் பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தனகொளல் என்ற விதியைச் சுட்டிக் கூறப்பெறும் உவமைக்கும் எய்துவிக்கின்றது.

பொருள் ;- ஒரு பொருளைப் பற்றி உவமங் கூறுமிடத்து உவமத் தன்மையும் உவம உருபும் உவமிக்கப்படும் பொருளொடு ஒத்தன வாதல் வேண்டும்.

உவமையும் என எண்ணின் கண் நின்ற உம்மையை எச்சமாக்கி உவமச் சொல்லும் ஒத்தல் வேண்டுமெனவும் கொள்க. என்னை? அவை அவ்வாறு பாகுபடுத்துஓதப் பெறுதலான் என்க.

ஒன்றனை உவமமாக்கிக் கூறுங்கால் அப்பொருளின் உவமத் தன்மையை உலகத்தார் இஃது ஒத்தது என உளங் கொள்ளுமாறு தேர்ந்து கூறல் வேண்டுமென்பது இதன் கருத்தாகும்.

வரலாறு :- மயிற்றோகை போலுங் கூந்தல் என்பதன்றிக் காக்கைச் சிறகன்ன கூந்தல் எனக்கூறின் அவ்வுவமை உளங் கொளப்படாதென்பது. என்னை செறிவும் நெடுமையும் கொண்டு விளங்குங் கூந்தலை அவையில்லாத காக்கைச் சிறகொடு ஒப்பித்துக் கூறல் நிரம்பாமையான் என்க. காக்கைச் சிறகன்ன கருமயிர் என்ன அதன் நிறம் பற்றிக் கூறின் உளங் கொள்ளப்படும் என்க.

இனி ஒத்தல் வேண்டுமென்பதற்கு வினைபயன் மெய் உருவாகியவகையேன்றித் தகவான் ஒத்தல் வேண்டும் என்பதும் பொருளாகக் கொள்க. அஃதாவது "வேந்தற்கு வேங்கை போல்வார் வீரர் பலர்" என்பதன்றி மன்னவற்கு நாய்போல் வயவர் பலர் எனல் தகவாகாமையறிக.

இனி உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும் எனப் பாடங் கொண்டு உவமம் இரட்டைக்கிளவியாயினும் நிரல்நிறுத் தமைத்த நிரல்நிறை சுண்ணமாயினும் பொருளும் அவ்வாறே வருதல் வேண்டும் என உரைகூறுவார் இளம்பூரணர். அப்பாடத்திற்கு அவ்வுரை பொருந்தும் எனினும் ஆசிரியர் இரட்டைக்கிளவி பற்றியும் நிரல்நிறைபற்றியும் மேலே விதந்து

கூறலின் அது கூறியது கூறலாகும். அவ்வுரையான் உவமை பொருளொடுஒத்தல் வேண்டும் என்னும் இன்றியமையாத விதி அப்பாடத்தான் எய்தா தொழிதலின் அப்பாடம் பொருந்தாமை யறியலாம்.

சூ. பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவமமாகும்.

கருத்து:- உவமமும் பொருளுமாகிய அவைபற்றி வருவதோ ரையமகற்றுகின்றது.

பொருள்:- மேற்றொட்டு மரபாக வரும் பொருளை உவமமாகவும் உவமத்தைப் பொருளாகவும் மாற்றியமைத்துக் கூறினும் அது மயக்கமற வந்த சிறப்பினையுடைய உவமமேயாம்.

அஃது என்றது மேற்றொட்டு உவமிக்கப்படுவதாக வரும் பொருளை. மருளறு சிறப்பாவது "உயர்ந்ததன்மேற்றே உள்ளுங்காலை" என்றதனை.

ஒரு பொருளை உவமத்தான் விளக்கும் நோக்கம் அப்பொருளைத் திரிபின்றி உணரச் சிறப்பாக உணர்த்த வேண்டுமென்பதன்றே? அதனான் உணர்த்தப்படும் பொருளினும் உணர்த்தும் உவமம் உவமத்தன்மையாற் சிறப்புடையதாக இருத்தல் வேண்டுமென்பதை "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை" என்னும் சூத்திரத்தான் வற்புறுத்தினார்; மற்று இருதிணைப்பொருள்களுள் இவையெல்லாம் உவமமாக வரும் இவையெல்லாம் பொருளாக வரும் என்னும் வரையறையில்லையாயினும் மேற்றொட்டுப் பொருளிவை உவமமிவை எனமரபாக வரும் வழக்காறு நோக்கிப்

"பொருளே உவமம் செய்தனர் மொழியினும்"

என்றார்.

எ-டு:- 'வருமுலையன்ன வண்முகை யுடைந்து
திருமுகமவிழ்ந்த தெய்வத்தாமரை' எனவரும்

நின்னே போலும் மஞ்ஞையால, நின்
நன்னுதல் நாறும் முல்லை மலர
நின்னே போலமா மருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனென் (ஐங் 492)

என்பது மது

'வருமுலை யன்ன வண்முகையுடைந்து திருமுகமவிழ்ந்த தெய்வத்தாமரை" எனக்கூறுமவன் உணர்வு முலையையும் முகத்தையும் தாமரை முகையையும் மலரையும் கொண்டு சிறப்பித்தலேயாயினும் உவமத்தன்மை முகையினும் முலைக்கும், மலரினும் முகத்திற்கும் மிக்குளதாகக்கருதிக் கூறலின் மருளறுசிறப்பினஃதுவமமாகும் என்றார்.

இனி இச்சூத்திரத்திற்கு "உவமிக்கும் பொருள் தன்னை உவமையாகக் கூறினும் மயக்க மற்ற சிறப்பு நிலையான் எய்தும் உவமையாகும் எனஉரைகூறி, ஒருசாராசிரியர் ரூபகம் என்று சொல்லப்பட்டது உவமைபற்றி வருதலின் இஃது உவமையின் பாகுபாடென்பது இவ்வாசிரியர் கருத்து என இளம்பூரணர் விளக்கந் தந்துள்ளார்.

பேராசிரியர் இவை உவமத் தொகையாங்கால் முலைக்கோங்கம் முகத்தாமரை எனப்படும் இவற்றை வேறு உருவகமென மயங்குப." எனக்கூறி இளம்பூரணரைக் குறிப்பான் மறுத்துரைத்தார். எடுத்துக்காட்டாக இரும்பு முகஞ் செறித்த ஏந்தெழின் மருப்பின் (புறம்—169) என்னும் செய்யுளை காட்டியுள்ளார். அவ்வாறு வருவனவற்றை'

வேறுபட வந்த உவமத் தோற்றம்
கூறிய மருங்கிற் கொள்வழிக் கொளாஅல்

என்னும் சூத்திரத்துள் அடக்கிக் கொள்ளுதலே நேரிதாகும். பேராசிரியர்க்கும் இதுவே கருத்தாதல் அவருரையான் விளங்கும்.

சூ. 10. பெருமையும் சிறுமையும் சிறப்பிற் றீராக்
குறிப்பின் வரூஉம் நெறிப்பா டுடைய

கருத்து : உவமநிலைக்களங்களுக் காவதொரு முறைமை கூறுகின்றது.

பொருள் : சிறப்பும் நலனும், காதலும் வலியும் கிழக்கிடு பொருளும் காரணமாக ஒரு பொருளை உவமிக்குங்கால் கூறப்பெறும் பெருமையும் சிறுமையும் உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை என்றதற்கேற்ப அவை சிறப்பிற்றீராத குறிப்பின வாய்வரும் முறைமையை உடையனவாகும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்-613 001.

தமிழ்நாடு, இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்

1. Tamil Literature — Prof. M. S. Purnalingam Pillai — உரு. 85/— U.S.$ 17

2. மொழி நூல் —மாகறல் கார்த்திகேய முதலியார் — உரு. 75—

3. Tamil University Machine Translation System (TUMTS) — Rs. 75/— U.S.$ 15
   Co-authors : K. C. Chellamuthu K. Rangan
   K. Murugesan

4. A Study on the Thanjavur Art Plate — Prof. P. Saravanavel — Rs. 60/— U,S.$ 12

5. நாமதீப நிகண்டு — உரு. 68 -
   —கல்லிடைநகர் சிவசுப்பிரமணியக் கவிராயர்

6. மொழி நூற் கொள்கையும் தமிழ்மொழி அமைப்பும் — உரு. 45/—
   — பேரா கா. சுப்ரமணியப் பிள்ளை

7. Indians in South Africa — Prof. K. Nambi Arooran — Rs. 60/— U.S.$ 12

விற்பனைக் கழிவு: அஞ்சல் வழி 25°/o
நேரில் 30°/o
அஞ்சல் செலவு தனி
பேராசிரியர் ஆய்வாளர்களுக்கு 40°/o
விற்பனையாளர்களுக்குப் பெறும்படிகளுக்கு ஏற்ப கழிவு உண்டு.

தொடர்பு கொள்க:- பதிப்புத்துறை இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 001.

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ் நூல் — விபுலானந்த அடிகள்	ரூ	50	00
கட்டுரைப் பொழில் (சங்க மணிவிழா மலர்)	ரூ.	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60	00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டு விழா நினைவுச் சிறப்பிதழ்	ரூ.	6	00
கபிலர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ	4	00
நக்கீரர் - நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு – பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2	00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1	00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0	62
சிவமும் செந்தமிழும்–பாவலர் ச. பாலசுந்தரம்	ரூ.	0	25

பிற வெளியீடுகள் :

கரந்தைக் கோவை (அகப்பொருட் கோவை நூல்) பேராசிரியர் ச. பாலசுந்தரம்		7	50
கலைக்கூத்தன் கவிதைகள்	ரூ.	6	00

நூல்கட்குக் கழிவு 20% தரப்பெறும். அஞ்சற் செலவு தனி.
நூல்கள் வேண்டுவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுக.

தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613002.

பதிப்பாசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்-2.

பேராசிரியர். க. வெள்ளைவாரணன்,
142, கனகசபை நகர், சிதம்பரம்.

சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி., பி. எல்.,
இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை.

டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி.,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம்.லிட், பிஎச். டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பேராசிரியர். பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

புலவர் ஆ. பாலன், எம். ஏ.,
துணை முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

புலவர். மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரச மேனிலைப் பள்ளி, தஞ்சாவூர்-2.

திரு பா. மதிவாணன், எம். ஏ., எம்.பில்.,
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்-2

பதிப்பாசிரியர்
பேராசிரியர் ச பாலசுந்தரம்

Regd. No. TN/TJ/17.

நூல்-அஞ்சல்

பெறுநர்

திருமிகு

11. The Curator,
Govt. Oriental Manuscripts Library,
M a d r a s. 600 005

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு		வெளிநாடு	
தனியிதழ்	ரூ.	2	50	3	00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	25	00	60	00
வாழ்நாள் கட்டணம்	ரூ.	250	00	600	00

வெளியிடுபவர் : திரு. ச. இராமநாதன், தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.
அச்சிடுபவர் திரு. M. சந்திரமௌலி, ஜெமினி அச்சகம், 1837/1, மேலராசவீதி, தஞ்சாவூர் - 613 009.